Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 17 (09.03.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :161

# மட்டு. ஆயர் தலைமையிலான குழு புலிகளைச் சந்தித்து நேற்று பேச்சு!



ஆயர் தலைமையிலான குழுவை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கரிகாலன், ரமேஷ், ராம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

## கிழக்கு நிலைமை குறித்து ஆராய்வு

(கிளிநொச்சி)

**மட்டக்களப்பு பேராயர் அதிவணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, கிழக்குப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள், தொண்டர் நிறுவன உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவினர் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.**

விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மட்டு-அம்பாறை விசேட தளபதி ரமேஸ், தளபதி ராம், கரிகால்ன், மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கருணா மீதான நடவடிக்கை குறித்து மேற்படி குழுவினருக்கு விளக்கிக்கூறிய விடுதலைப் புலிகள், இயக்க நடைமுறைகளுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவின் பிரதேசவாதத்திற்கு தமிழ்மக்கள் எடுபடமாட்டார்கள்!

## தமிழ்ச்செல்வன் பேட்டி



ரமேஷ், தமிழ்ச்செல்வன், ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

(கிளிநொச்சி)

கருணாவால் எழுப்பப்படுகின்ற பிரதேசவாத உணர்வுகளுக்கு எடுபடாது ஒன்றுபட்ட தேசியத்துக்கும் - ஒன்றுபட்ட தேசத்துக்குள் எமது தேசியத் தலைவரின் வழிநடத்தல் பற்றி எங்களது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதிகள், ஆயா கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் பொது அமைப்பு பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தனர்.

இவ்வாறு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். நேற்று மட்டக்களப்பிலிருந்து வந்த மட்டு - திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையிலான தூதுக்குழுவுக்கு மட்டக்களப்பு நிலை குறித்து விளக்கமளித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவின் செயல்கள் கோழைத்தனமானவை!

## திருமலை கட்டளைத் தளபதி கேணல் பதுமன்



பதுமன்

(கிளிநொச்சி)

மட்டக்களப்பில் ஏற்பட்டது ஒரு தனிநபர் பிரச்சினை. கருணா செய்யும் செயல்கள் கோழைத்தனமானவை. இது நிலைக்கப்போவதில்லை. சொற்பகாலத்துக்குள் இதற்கொரு முடிவு காணப்படும் என விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் தெரிவித்தார்.

கிளிநொச்சி வந்திருக்கும் தளபதி கேணல் பதுமன் கிழக்கு நிலைமை குறித்து செய்தியாளருக்கு விபரித்தபோது -

தேசியத் தலைவரை நான் அடிக்கடி சந்திப்பது வழக்கம். மூன்று அல்லது நான்கு மாதத்துக்கொரு தடவை இந்தச் சந்திப்பு நடை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு விவகாரத்தில் நோர்வே தலையிடாது!

## தூதரகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளின் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி தொடர்பான விடயங்களை தம்மால் கண்காணிக்க முடியாது என நோர்வே அரசாங்கம் தெரிவித்திருப்பதாக, நோர்வே தூதரகம் நேற்றுத் தெரிவித்தது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட நோர்வே தூதரகப் பேச்சாளர் ஒருவர் மேலும் தெரிவிக்கையில் -

நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தற்போது கொழும்பு வந்துள்ளார். இவர் தனது இலங்கை விஜயத்தின்போது கிழக்கு மாகாணத்துக்குச் சென்று கருணாவைச் சந்திக்கமாட்டார்.

இதேவேளை - கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ள எரிக் சொல்ஹெய்ம், கிழக்கில் ஏற்பட்டிருக்கும் சூழல் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட முக்கியஸ்தர்கள் பலரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கிறார்.

அத்துடன், இவர் அரசாங்க சமாதானப் பிரதிநிதிகள், பிரதமர் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## சாவகச்சேரி - சங்கத்தானையில்

# பொலிஸாரின் அடாவடித்தனம்; எதிர்த்து பொதுமக்கள் மறியல்



வீதிமறியலில் ஈடுபட்டிருக்கும் மக்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பிரசார வாகனத்தை பொலிஸார் தடுத்து நிறுத்தியதையடுத்து - அப்பகுதியில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலைஏற்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம் இன்று அளவெட்டியில் நடைபெறும்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக்கூட்டம் இன்று மாலை 7 மணியளவில் அளவெட்டி ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்தப்பிரசாரக் கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் தேர்தல் பிரசார வேலைகளுக்கு பொறுப்பாக பகுதி ரீதியாக பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆறு கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்ட அளவெட்டிப் பகுதிக்கு ஒருவரும் தெல்லிப்பழை கிழக்கு மற்றும் கட்டுவன் பகுதிக்கு ஒருவரும், மல்லாகம் ஏழாலைப் பகுதிக்கு ஒருவரும், இளவாலை-பன்னாலைப் பகுதிகளுக்கு ஒருவருமாக நான்கு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நான்கு பேரின் தலைமையிலான குழுக்களினால் இப்பகுதியில் பிரசார வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொது இடங்களில் கூட்டங்களை நடத்துதல், வீடு வீடாகச் சென்று பிரசாரங்களை மேற்கொள்வதுடன் மக்களுக்கு வாக்களிப்பது தொடர்பான அறிவை வழங்கல் ஆகிய நடவடிக்கைளை இக்குழுவினர் மேற் கொண்டு வருகின்றனர்.

இந்தக்குழுவினரின் செயற்பாடுகளை தெல்லிப்பழை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ச.தனபாலசிங்கம், தெல்லிப்பழை பிரதேசப் பொறுப்பாளர் பி.ஜனா ஆகியோர் மேற்பார்வை செய்து வருகின்றனர்.

இதேவேளை - அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் தினமும் தொகுதி தொகுதியாக மக்கள் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு பிரசார வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (94)

## புளியமரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து படுகாயம்

புளியம்பழம் பறிப்பதற்காக உயரமான புளியமரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து இடுப்புப் பகுதியில் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாவகச்சேரி பெருங்குளத்தைச் சேர்ந்த ஐயாத்துரை சிறிதரன் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (34)

## பரிசளிப்பு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும்

யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தின் சிறப்பு மலர் வெளியீடும், பரிசளிப்பு விழாவும் நாளை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் து.நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் சி.சிவசரவணபவனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சனசமூகநிலைய நிர்வாகக் குழு தெரிவு

மூளாய் ஐக்கிய இளைஞர் சனசமூக நிலையத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகக் குழு தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் நிலையத் தலைவராக சி.நவரெத்தினம், செயலாளராக அ.ஜெயகாந்தன் பொருளாளராக கி.இந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ப)

# மகளிர் தினத்தையொட்டி நேற்று வாகனப் பவனி!

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.குடாநாட்டில் வாகனப் பவனி ஒன்று இடம்பெற்றது

அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயம், மனித உரிமைகள ஆணைககுழு, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, போரூட முதலிய 13 அமைப்புக்களின் ஏற்பாட்டிலேயே இந்த வாகனப் பவனி இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது நேற்றுக் காலை கோவில் வீதியில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலய அலுவலகத்திலிருந்து ஆரம்பமாகி அங்கிருந்து நகர வீதியை அடைந்து குருநகர்ப் பகுதிக்குச்சென்று அங்கி ருந்து யாழ். நகரப்பகுதியை அடைந்து அங்கிருந்து மானிப்பாய் வீதியூடாக மானிப்பாயை அடைந்து அங்கிருந்து சுழிபுரம் சென்று பேரணி நிறைவடைந்தது.

இந்தப் பேரணியில் 20 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (130)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்க கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியானது இந்தமாதம் 11,12,13 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர்கல்லூரியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் தமது கண்காட்சிப் பொருட்களை 10 ஆம் திகதி பி.ப 2 மணியளவில் யாழ்.இந்து மகளிர்கல்லூரியில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் ஒழுங்குபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன், மேற்படி கண்காட்சிப் போட்டியில் அனைத்து மாணவர்களும் தவறாது ஆர்வத்துடன் பங்குபற்றி தமது ஆக்கங்களைத் தந்துதவ வழமைபோன்று இம்முறையும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றோம் என யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

## சிறு விளம்பரம்

### பொது அறிவுத் தகவல்கள்

ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான மிகச் சமீபகால உள்நாட்டு, வெளிநாட்டு தகவல்கள், மற்றும் கடந்தகால வினாத்தாள்கள், மாதிரி வினாத்தாள்கள் என்பவற்றை உள்ளடக்கிய திருமதி.மேரி ஜேசுதாசனின் 'பொது அறிவுத் தகவல்கள்' புதிய வெளியீடு அனைத்துப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கிறது.
விலை : 100/- (660)




**வீடு விற்பனைக்கு உண்டு**

சுதுமலையில் மாடிவீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.

வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன், கீழே குறிப்பிடும் நேரத்தில் தொடர்புகொண்டு மேலதிக விபரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல :
416 - 497 - 2867 (கனடா)

இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணியில் இருந்து காலை 9 மணிக்குள் தொடர்புகொள்ளவும்.

**திறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்
ரஜனி, ஸ்ரீப்பிரியா,
நடித்த
**பில்லா**

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

(சி-2262)

**BLOOD SPORT - 2**

**ஆண் பெண் இருபாலருக்குமான வேலைவாய்ப்பு**

பருத்தித்துறையில் இயங்கும் தும்புக்கண்ணாடி இழை நார்ப் படகு உற்பத்தி நிறுவனத்தில் வேலைசெய்வதற்கு ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கமுடியும். முன் அனுபவம் கவனத்தில் கொள்ளப்படும்.

- மோல்டர் சம்பளம் 13000
- பொருத்துனர் ,, 11000
- உதவியாளர் ,, 6000
- பயிலுநர் ,, 4500
- உணவு, தங்குமிடம் இலவசம்



தொடர்புகளுக்கு:- புதிய அஜஸ்மின் தொழிலகம்
வெளிச்சவீடு அருகாமை
பருத்தித்துறை.
தொலைபேசி - 2264027

(சி-2307)

**THE INTERNATIONAL ASSOCIATION OF LIONS CLUBS**

We Serve

*Distict 306 B Srilanka*



Lion Dr.Rohan Perera
Dis. Governor
Dist.306B

Lion Asoka De Z.Gunasekara
Intl.Director L/Y:2003/05

கடந்த ஞாயிறு அன்று நடைபெற்ற லயன்ஸ் கழக பிராந்திய மகாநாட்டுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட லயன் Dr.ரோகான பெரேரா, லயன் Dez.குணசேகரா மற்றும் முன்னாள் ஆளுநர்களை மன மகிழ்வுடன் வரவேற்கின்றோம். அத்துடன் சலரோக விழிப்புணர்வு போட்டியில் வெற்றிபெற்றவர்களையும் அதனை சிறப்புற நடத்திய லயன் Dr.அருளானந்தம் அவர்களையும் வாழ்த்துகின்றோம்.

விளம்பர அனுசரணை -

அம்பிகா டிஸ்பென்சறி சாவகச்சேரி
சாயிராம் டிஸ்பென்சறி சாவகச்சேரி
திருப்பதி மெடிக்கல் யாழ்ப்பாணம்
யாழ்.மெடிக்கல் சென்ரர் யாழ்ப்பாணம்
தனு கல்லுடைக்கும் தொழிற்சாலை கிராம்புவில் சாவகச்சேரி

(சி-2308)

**ராஜா** யாழ்ப்பாணம்.

சிம்பு, சோனியா அகர்வால்,
நாசர் நடித்த
**கோவில்**



10.30, 2.30,
6.30, 9.30 (பு.நே)

(சி-2263)

**மகேந்திரன் இந்திரா எஞ்ஜினியேர்ஸ்**

**Mahendran Inthira Engineers**

தரமான உழவு இயந்திரப் பெட்டிகளை மலிவாகச் செய்து பெற்றிட நாடுங்கள்.

தட்டாதெரு சந்தி.
யாழ்ப்பாணம்.

(சி-2305)

**மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எங்கள் ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலையத்தை புனரமைத்துத்தந்து அவற்றிற்குத் தேவையான தளபாட வசதிகளையும் செய்து விவசாயிகளுக்கான நீர் இறைக்கும் இயந்திரங்களையும், மண்வெட்டிகளையும் தந்துதவிய "அம்டா" நிறுவனத்திற்கும் அந்த நிறுவனத்தின் யாழ்.மாவட்ட திட்டப் பணிப்பாளர்

**திரு.கிறோயுக்கி ஒக்காசக்கி**

அவர்களுக்கும்
எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எல்லாம் வல்ல மருதடிப் பிள்ளையாரின் திருவருளோடு திரு. கிறோயுக்கி ஒக்காசக்கி அவர்கள் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(சி/2306)

ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலைய
நிர்வாக உறுப்பினர்களும்,
மட்டுவில் வாழ் மக்களும்.

நிரந்தர சமாதானம், நிரந்தர தீர்வு, நிரந்தர அமைதி, நிம்மதியான வாழ்வு ...
என்ற ஈழத்தமிழரின் அபிலாசைகளை வென்றெடுக்க



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்யாழ். மாவட்ட வேட்பாளர்

**திரு. செல்வராஜா கஜேந்திரன்**

(முன்னாள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரும்,
சர்வதேச மாணவர் பேரவைத் தலைவரும், பொங்கு தமிழை வழிநடத்தியவரும்)

**இலங்கை தமிழரசுக்கட்சி** X 10

ஈழத்தமிழரின் ஒருமித்த குரலை பொங்குதமிழ் உணர்வுடன் உலகுக்கு உணர்த்துவோம்.

நசிந்து இனிக் கிடக்கமாட்டோம் என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துரைப்போம்.


-வடமராட்சி மக்கள் -

## புலிகளுடனான யுத்தத்தால்

# இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் அபிவிருத்திக்கான நிதியும் செலவானது

## காலி பிரசாரக்கூட்டத்தில் பிரதமர்

**யுத்தத்தின் காரணமாகத் தென்னிலங்கைப் படை வீரர்கள் கொல்லப்பட்டதும், நாட்டின் அபிவிருத்திக்கான நிதி வீணாக்கச் செலவுசெய்யப்பட்டதுமே தவிர பயன் ஏதுமில்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



கடந்த பொ.ஐ.மு. அரசாங்கத்தில் விடுதலைப் புலிகள் நம்பிக்கை இழந்ததால், நாட்டில் மீண்டும் யுத்தம் வெடித்தது.

அப்போதைய இராணுவத் தளபதிகளின் ஆலோசனைக்கு இணங்க, அபிவிருத்திக்கான நிதிகள் அனைத்தும் யுத்தத்திற்குச் செலவிடப்பட்டது. ஒருவருடத்தில் யுத்தத்தை வெற்றிகொள்ளமுடியும் என இராணுவத் தளபதிகள் கூறினர்.

எதிரணியிலிருந்த நாமும் நிதி ஒதுக்கீட்டுக்கு அனுமதித்தோம். ஆனால், நடந்தது என்ன? யுத்தம் வெற்றிகொள்ளப்படாமல், முழுநாட்டிற்குமே பரவியது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக்கூட்டங்கள் காலி மாவட்டத்தில் பல இடங்களிலும் இடம்பெற்றன.

பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டங்களில முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன, கஜந்த கருணாதிலக, ஜயன் ஜயவர, அசோக் தனவன்ச, ஜாலிய சில்வா ஆகிய வேட்பாளர்கள் தலைமையில் இடம்பெற்றன.

இந்தக் கூட்டங்களின்போது, பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர் ரணில் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது-

18 மாதமாக 'ஜயசிக்குறு' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட யுத்தம் காரணமாகப் பெற்றது என்ன? ஒட்டுசுட்டான், மாங்குளம், முல்லைத்தீவு, ஆனையிறவு தொடக்கம் சாவகச்சேரி வரை புலிகளின் கைகளுக்கு மாறியது.

மகாவலி திட்டத்திற்கு நிகரான பத்திற்கும் மேற்பட்ட பாரிய திட்ட நிதிகள் வீணாகின. பல பெயர்களில் யுத்தம் மேற்கொள்ளப்பட்டும், வடக்கில் எந்தப் பிரதேசத்தையும் மீட்க முடியவில்லை. இதுவே ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதான நடவடிக்கையும், யுத்த முன்னேற்றமுமாகும்.

அதுமட்டுமன்றி - கண்டி தலதா மாளிகை, கொழும்பு மத்திய வங்கி, கட்டுநாயக்கா விமானநிலையம் என்பன தாக்கப்பட்டன. நாடு முழுவதுமே யுத்தகளமாகியது.

மறுபக்கம் நாட்டின் பொருளாதாரம் குட்டிச்சுவராகியது. உலகநாடுகளிடம் பெற்ற கடன்களுக்கான வட்டி அதிகரித்துச் சென்றதுடன், உள்நாட்டு உற்பத்திமூலம் பெறுகின்ற வருமானத்தினால் கடன்களைச் செலுத்தமுடியாதநிலை ஏற்பட்டது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகளைச் செய்யத் தயங்கினர். நாளுக்கு நாள் யுத்தபீதி, நடமாட்டத்திற்குச் சுதந்திரமின்மை, இளஞ் சந்ததியினரிடையே விரக்தி, கடன்களுக்கான வட்டிவீதம் அதிகரிப்பு இவைகளே ஜனாதிபதி நமது நாட்டு மக்களுக்குத் தேடிக்கொடுத்தது.

இந்த நிலையில்தான் இரு ஆண்டுகளுக்கு முன்னர் நான் நாட்டைக் கையேற்றேன்.

யுத்தம் நிறுத்தப்பட்டு, வடக்கு-கிழக்கிற்கான தற்காலிக நிர்வாக அமைப்பு இடப்பட்டு, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் என்ற நோக்கிலே நான் செயற்பட்டேன்.

சர்வதேசத்தின் பார்வையை நாட்டின் பக்கம் திருப்பி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே நான் முற்பட்டேன். இவற்றுக்கு முக்கியமாக அமைந்தது சமாதான ஒப்பந்தம் ஒன்றேயாகும். சமாதான நடவடிக்கை விடயங்களில் இன்றும் நான் கால்பதித்தவனாகவே உள்ளேன். சமாதானம், பொருளாதாரம் ஆகிய இரண்டையும் விட்டு, நாட்டை முன்னேற்றமுடியாது என்பதை மக்கள் உணரவேண்டும்.

உடைந்து போயுள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியுமாயின், பெந்தோட்டையிலிருந்து கதிர்காமம்வரை உல்லாசத் துறையினரால் நிரப்பமுடியும். நிலையான ஒரு அரசாங்கம் இல்லாமல்போனால், வெளிநாட்டு முதலீட்டாளர்களை இங்கே எதிர்பார்க்கமுடியாது.

எனவே, நாட்டினதும் மக்களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு, எதிர்வரும் தேர்தலின்போது, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

### தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுமுன்தினம் மாலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில், 18 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றிருப்பதாகத் தேர்தல் வன்முறைகள் தொடர்பான தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தேர்தல் வன்முறைகளுடன் சேர்த்து, தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் நிகழ்வு இடம்பெற்ற தினத்திலிருந்து இதுவரை 236 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தாய்லாந்து யுத்தக் கப்பலில் 500 கடற்படையினரும் வருவர்!

## இலங்கைப் கடற்படையினருக்கும் பயிற்சி

(கொழும்பு)

தாய்லாந்து யுத்தக் கப்பல் ஒன்று 500 கடற்படையினருடன் இன்று இலங்கை வருகின்றது.

கடற்படை அதிகாரிகளை ஏற்றி வரும் இந்தக் கப்பல் -அதிகாரிகளை இறக்கிவிட்டு தமது நாட்டுக்குத் திரும்பும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளும் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இவர்கள் வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இலங்கை கடற்படையைப் பலப்படுத்தும் நோக்குடன் வந்துள்ள இவர்கள், பத்தாயிரம் கடற்படையினருக்குப் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(01)

# சட்ட ஆலோசகர் விஜயதாஸ ஊடகப் பணியிலிருந்து நீக்கம்

ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியில் சட்ட ஆலோசகர் விஜயதாஸ ராஜபக்ஷ - லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பதவியிலிருந்தும், ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர் பதவியிலிருந்தும் விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தனது பதவி விலகல் கடிதத்தை ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கும், ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுததந்திர முன்னணியின் தேசியப்பட்டியலில் இவரது பெயர் இடம்பெறாததாலேயே, இவர் இந்தப் பதவிகளிலிருந்து விலகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால், இவர் நீதியமமைச்சராக நியமிக்கப்படுவாரெனச் சுதந்திரக்கட்சி இவரிடம் ஏற்கனவே தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

# பாதாள உலகக்கோஷ்டி கைதிகளை வெலிக்கடையிலிருந்து மாற்றத் திட்டம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த குழுக்களை, ஏனைய சிறைச்சாலைகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த இரு தினங்களாகச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கோஷ்டியினரிடையே மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் இதுவரை 50 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்து, சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பாதாள உலகக் கோஷ்டியினரிடையே அடிக்கடி மோதல்களும், முறுகல்கள் நிலைகளும் ஏற்பட்டுவருவதையடுத்து, ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகச் சிறைசசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதாள உலகக்கோஷ்டியினரிடையே ஏற்படும் மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் கலகத்தடுப்பு பொலிஸார் உசார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, நேற்றிரவு 5 பேர் களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(01)

# விருப்புவாக்கு மோதல் குருநாகலில் பதற்றம்!

குருநாகல் மாவட்டத்தில் விருப்பு வாக்களித்தல் விடயத்தில் ஜே.வி.பி. கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே முரண்பாடுநிலை தோன்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் முன்னணி அங்கத்தவர்களில் மூவர் - ஜே.வி.பி. கட்சி சார்ந்தவர்களையும், ஏனைய மூவர் சிறிலஙகா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர்.

இவர்களில் ஜே.வி.பி. சார்பில் போட்டியிடும் மூவரும் தமது விருப்பிலக்கத்திற்கு வாக்களிக்குமாறு கூறி வரும் நிலையில், சுதந்திரக்கட்சி வேட்பாளர்கள் விருப்புவாக்களிக்க வேண்டாமெனப் பிரசாரப்படுத்தி வரும் நிலையிலேயே, முரண்பாடு நிலை தோன்றியிருப்பதாகவும்,

இந்த முரண்பாடு - இருகட்சி வேட்பாளர்களுக்குமிடையே முறுகல்நிலையைத் தோற்றுவித்திருப்பதாகவும் தெரியவருகிறது. (01)

# எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு விஜயம்



நோர்வேயின் இலங்கைக்கான விஷேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றிரவு இலங்கைக்கு வந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் கிழக்குத் தளபதியாக இருந்த கருணாவின் முடிவினால் ஏற்பட்ட நிலைமை தொடர்பாக ஆராயும் முகமாகவே, இவரின் விஜயம் அமைந்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை வந்துள்ள எரிக் சொல்ஹெய்ம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்து, தற்போதைய நிலைமை குறித்து ஆராய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேசக்கூடுமெனக் கூறப்படுகிறது.

இதேவேளை, சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் - விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் தற்போதைய நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மீது தம்புத்தேகமவில் தாக்குதல்!

ஜே.வி.பியின் ஆதரவாளர்கள் சிலர் - தம்புத்தேகமையில் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

விகாரைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த ஜே.வி.பி இன் ஆதரவாளர்களில் சிலரே இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் வந்த கோஷ்டி ஒன்றினால் தாக்குதலுக்குள்ளாயினர்.

இந்தச்சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். இவர் சிகிச்சைக்காக பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் ஜே.வி.பி கட்சியைச் சேர்ந்த அநுராதபுர வேட்பாளரும், ஜே.வி.பியின் வடமத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர்.பி.ஏ ரணவீர பத்திரணவின் வெற்றிக்காகப் பிரார்த்தனை ஒன்றில் ஈடுபட்டு விட்டு வீடு நோக்கிச்சென்று கொண்டிருந்த சமயமே, ஜே.வி.பியினர் இந்தத் தாக்குதலுக்குள்ளாயினர்.

இலக்கத்தகடு இல்லாத வாகனத்தில் வந்து இறங்கிய இனந்தெரியாத குழு - முதலில் துப்பாக்கிச் சூடுகளை வானத்தை நோக்கி மேற்கொண்டனர். பின்னர் சைக்கிள் செயின், கம்பிகள், தடிகள் ஆகியவற்றைக் கொண்டு ஜே.வி.பி ஆதரவாளர்களைத் தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஐக்கிய தேசிய முன்னணியின் அநுராதபுர மாவட்ட வேட்பாளர் ஹரிசனின் ஆதரவாளர்களே காரணமென, தாக்குதலுக்குள்ளானவர்கள் தம்புத்தேகம பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக தம்புத்தேகம பொலிஸ் விசாரணைகளை நடத்தி வருகிறது.

# கூட்டமைப்பின் தேர்தல் பணிமனை திருமலை நகரில் திறந்து வைப்பு

திருமலை மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பணிமனை - திருமலை பிரதான வீதியில் அமைந்துள்ள தனியார் கட்டடத்தில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர் த.துரைராஜா தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் இரா.சம்பந்தன் உட்பட ஆறு வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

திருமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் நடவடிக்கைளை ஒன்றிணைக்கும் மத்திய நிலையமாக இந்த அலுவலகம் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அன்புவழிபுரம், உவர்மலை போன்ற இடங்களிலும் நேற்றுமுன்தினம் கூட்டமைப்பின் அலுவலகங்கள் திறந்துவைக்கப்பட்டன.

இதனைவிட ஒவ்வொரு இடங்களிலும் தேர்தல் செயலணிகள் அமைக்கும் பணியில் கூட்டமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒருகட்டமாக தம்பலகாமம் பகுதியிலும் கந்தளாய் பிரதேசத்திலும் ஆலங்கேணி பிரதேசத்திலும் தேர்தல் செயலணிகளை அமைக்க கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

(04,10)

# முரளிதரனின் பந்து வீச்சில் அவுஸ்ரேலிய அணி சுருண்டது


முரளிதரன்

(கொழும்பு)

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் காலி மைதானத்தில் நேற்றுத் தொடங்கிய முதலாவது டெஸ்டில், அவுஸ்ரேலிய அணி முரளிதரனின் துல்லியமான பந்து வீச்சிற்கு முகம்கொடுக்க முடியாமல் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் முதலில் தமது அணி துடுப்பெடுத்தாடுமெனத் தெரிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி- அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜஸ்ரின் லாங்கர் 12 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, முதலாவது விக்கெட்டை இழந்தது. இதன் பின் ஹைடன், பொண்டிங் இருவரும் நிதானமாக விளையாடிய போதும், ஹைடன் 41, பொண்டிங் 21 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்தனர்.

இந்த நிலையில் மதிய இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது, அவுஸ்ரேலிய அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பின்னர் ஆட்டம் ஆரம்பமானதும் முரளிதரன் தனது பந்து வீச்சுத் தாக்குதலை ஆரம்பித்தபோது, அவுஸ்ரேலிய அணியின் விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கின. இறுதியில் அவுஸ்ரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களை பெற்றது.

அவுஸ்ரேலிய அணி சார்பில் நீண்ட காலத்திற்கு பின் விளையாடிய லீமன் மட்டுமே கூடுதலாக 63 ஓட்டங்களையும், ஹைடன் 41, பொண்டிங் 21, மார்ட்டின் 42 ஷேன்வோண் 23 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்ற அதே வேளை, ஜஸ்ரின் லாங்கர் 12, கில்கிறிஸ்ட் 4, முதலாவது டெஸ்டை நேற்று விளையாடிய சைமன்ட்ஸ், கஷ்பிரோவிச் இருவரும் ஓட்டம் எடுக்காமலும் ஜிலெஸ்பி ஆட்டம் இழக்காமல் 4 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் வேகப்பந்து வீச்சாளரான சமிந்தவாஸிற்கு இணையாக வேறொரு வேகப்பந்து வீச்சாளரும் அணியில் சேர்க்கப்படவில்லை. இந்த நிலையில் முரளிதரன் 6, குமார்தர்மசேன 2, சமிந்தவாஸ் மற்றும் உபுல் சந்தன இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தற்போது துடுப்பெடுத்தாடிக்கொண்டிக்கும் இலங்கை அணி ஒருவிக்கெட்டை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் சனத் ஜெயசூரியா 35 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஷேன் வோர்னின் பந்து வீச்சில் எல்.பி.


ஷேன் வோன்

டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். தற்போது அத்தபத்து 29, சங்ககார 17 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

நேற்றைய நிலவரப் படி, முரளிதரன் டெஸ்ட் போட்டிகளில் 491 விக்கெட்டுக்களையும், ஷேன் வோர்ன் 492 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

## உடற்பயிற்சிப் போட்டி

வடமராட்சி வலய மட்ட பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகள் யாவும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் எனவும், பங்குபற்றும் சகல பாடசாலைகளை யும் இந்தப் போட்டிக்கு ஆயத்தப்படுத்துமாறும் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிபார்கள் வி.வல்லிபுரம் தெரிவித்தார். (12)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் நல்லூர் இந்து தமிழ் மகளிர் பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெல்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி கு.குணராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக இராசா டீசல் எஞ்சினியரிங் உரிமையாளர் இராசாவாம தேவனும், சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். நல்லூக்கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (111)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

கொடிகாமம் அரசினர் வித்தியா லயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் கோ.ஶ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்தப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் நா. சத்தியநாதனும், சிறப்பு விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்ஜூம் கலந்துகொள்வார். (34)

# வடமராட்சி வலய பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி முடிவுகள்

2004 ஆம் ஆண்டுக்கான வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் முதல் 3 இடங்களையும் பெற்ற அணிகளின் விபரம் பின்வருமாறு:-

உதைபந்தாட்டத்தில் 17 வயதுப் பிரிவில் 1ஆம் இடத்தை யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், 2 ஆம் இடத்தை யா/கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும், 3 ஆம் இடத்தை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் 1ஆம் இடத்தை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியும், 2ஆம் இடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், 3 ஆம் இடத்தை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற்றன.

வலைப்பந்தாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் 1ஆம் இடத்தை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் 2ஆம் இடத்தை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையும், 3ஆம் இடத்தை யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் பெற்றது.

17 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும், 2 ஆம் இடத்தை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையும், 3 ஆம் இடத்தை யா/விக்கி னேஸ்வராக் கல்லூரியும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை யா/மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையும், 2ஆம் இடத்தை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை யா/விககினேஸ்வராக் கல்லூரியும் பெற்றன.

கரப்பந்தாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் 1ஆம் இடத்தை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும், 2 ஆம் இடத்தை யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும், 3 ஆம் இடத்தை யா/வேலாயுதம் மகாவித்தியாலயமும் பெற்றன.

17 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையும், 2 ஆம் இடத்தை யா/இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும், யா/விக்கினேஸ்வராக் கல்லூரியும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும், 2 ஆம் இடத்தை யா/விக்கினேஸ்வராக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை யா/ஞானசாரியார் கல்லூரியும் பெற்றன.

கிரிக்கெட் மென்பந்து போட்டியில் 19 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும், 2 ஆம் இடத்தை யா/ஹாட்லிக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற்றன.

சதுரங்கம் 15 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான போட்டியில் 1ஆம் இடத்தை யா/ஹாட்லிக் கல்லூரியும், 2ஆம் இடத்தை யா/ஞானசாரியார் கல்லூரியும், 3ஆம் இடத்தை யா/விக்கினேஸ்வராக் கல்லூரியும் பெற்றது.

15 வயது பெண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் 2ஆம் இடத்தை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும், 3ஆம் இடத்தை யா/ஞானசாரியார் கல்லூரியும் பெற்றன.

மேற்குறிப்பிடப்பட்ட போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற பாடசாலைகள் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகளில் பங்குபற்றவுள்ளன எனவும், அணிகளை தயார் நிலையில். இருக்குமாறு வடமராட்சி உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார். (12)

# விளையாட்டு

## ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி இந்த வருடம் இலங்கையில்!

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இலங்கையில் நடைபெறும் என்று ஆசிய கிரிக்கெட் சபைச் செயலாளர் அஷ்ரப் தெரிவித்தார். ஜூலை 15 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதிவரை நடைபெறும் இந்தப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய 4 நாடுகளோடு தகுதிச் சுற்றில் வெற்றிபெறும் 2 நாடுகளும் இதில் பங்கேற்கின்றன.

இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவி வந்த பிரச்சினை காரணமாக 2000 ஆம் ஆண்டில் இருந்து இந்தப்போட்டி நடைபெறவில்லை. தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான உறவால் ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி மீண்டும் நடக்கிறது. இந்தியா 3 முறையும், இலங்கை 2 முறையும், பாகிஸ்தான் ஒரு முறையும் ஆசியக் கோப்பையைக் கைப்பற்றியுள்ளன.

# விடுதலைச் சிறுத்தைகள் வேட்பாளர் புதுவையில் போட்டியிடவுள்ளார்

## திருமாவளவன் தெரிவிப்பு

பாண்டிச்சேரி தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகளின் வேட்பாளர் நிறுத்தப்படுவார் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திருமாவளவன் கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்- புதுவை நாடாளுமன்றத தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகளின் வேட்பாளர், மக்கள் கூட்டணியின் சார்பில் நிறுத்தப்படுவார்.

நான் சிதம்பரம் (தனி) தொகுதியில் போட்டியிடுகிறேன். இதுபோக மங்களூர்(தனி) தொகுதியிலும் விடுதலைச் சிறுத்தைகள் போட்டியிடும், மக்கள் கூட்டணியின் வேட்பாளர் பட்டியல் வரும் 11 ஆம் திகதி வெளியிடப்படும்.

மக்கள் கூட்டணி சார்பில் சேலத்தில் 14 ஆம் திகதி மாபெரும் மாநாட்டை நடத்தத் திட்டமிட்டிருந் தோம். ஆனால், சேலம் காவல் துறையினர், முதல்வரின் தேர்தல் சுற்றுப் பயணத்தைக் காரணம் காட்டி அனுமதி கொடுக்க மறுக்கின்றனர். எனவே, 22 ஆம் திகதி மாநாட்டை ஒத்திவைத்துள்ளோம்.

மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், சுலைமான்சேட் உள்ளிட்ட அகில இந்தியத் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்னர் என்று தெரிவித்தார்.

# எந்த அரசியல் கட்சியையும் நான் ஆதரிக்கமாட்டேன்!

## நடிகர் கமலஹாசன் தெரிவிப்பு

(சென்னை)

அரசியல் சாயம்பூசிக்கொள்ள நான் விரும்பவில்லை. எந்தக் கட்சியையும் நான் ஆதரிகக மாட்டேன் என்று கமலஹாசன் கூறியுள்ளார்.

பல்வேறு வட நாட்டு நடிகர், நடிகைகளை கட்சிக்குள் இழுத்துவரும் பா.ஜ.கவும், காங்கிரசும் தென்னகத்திலும் அந்த முயற்சியில் இறங்கியுள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரை ரஜினியையும், கமலையும் தங்கள் அணிக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் இழுக்க அவை முயல்கின்றன. இந்நிலையில் கமல் தனது நிலையை விளக்கியுள்ளார். விருமாண்டி படத்தின் 50 ஆவது நாளை முன்னிட்டு 1,000 ஏழைச் சிறுவர், சிறுமியருக்கு உடைகள், புத்தகங்கள் கமலஹாசன் நற்பணி மன்றத்தால் வழங்கப்பட்டது. கமல்ஹாசனின் சென்னை ஆழ்வார்ப்பேட்டை வீட்டில் இந்த நிகழ்ச்சி நடந்தது.

அப்போது, குழந்தைகளுக்காக எழுதப்பட்ட 'நிலவறை உலகம்' என்ற புத்தகத்தையும் கமல் வெளியிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் -

தமிழை மறக்க ஆரம்பித்துவிட்டோம். 'தாங்ஸ்' என்ற ஆங்கில வார்த்தை தமிழை விட அதிக பிரபலமாகிவிட்டது. பஸ், கிஸ் என்றெல்லாம்கூட நாம் பேசுவதை சாதாரணமாக ஆக்கிவிட்டோம். தமிழை மதிக்க வேண்டும், போற்றவேண்டும்.

விருமாண்டி படத்தை வெள்ளைக்காரர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள். ஜல்லிக்கட்டு காட்சியை அவர்கள் மிகவும் ரசித்தார்கள். படத்தில் ஒரு பிரச்சினையும் இல்லையே என்று கூறினார்கள். அவர்களுக்கும் கூட இங்கே நடந்த விவகாரம் தெரிந்திருக்கிறது.

எனது அடுத்த படம் கிருஷ்ண லீலா. இந்தப் பெயரை மாற்றவும் வாய்ப்புள்ளது. இது குழந்தைகளுக்கான படம். இதில் ஆபாசம், வன்முறை, செக்ஸ் என எதுவும் இருக்காது. குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவுள்ளோம். நானும் முக்கிய கதாபாத்திரத்தில் வருகிறேன்.

20 ஆண்டுகளாக எனது ரசிகர்கள் பல்வேறு நற்பணிகளைச் செய்து வருகிறார்கள். இது அரசியல் கலப்பில்லாத சுத்தமான நற்பணி. அரசியல் வாதிகள் நமக்கு ஒத்துவரமாட்டார்கள். எனக்கு அரசியல் சாயம் பூசிக் கொள்ளத் தெரியாது.

எந்தக் கட்சிக்காகவும், அரசியல் வாதிக்கும் ஆதரவாக நான் பிரசாரம் செய்ய மாட்டேன். அதற்கென்று பல நடிகர், நடிகைகள் உள்ளனர். நான் கொஞ்சம் வித்தியாசமானவன். நமக்கு அரசியல் சரிப்பட்டுவராது.

சினிமாவுக்கு நிறைய இளைஞர்கள் தேவைப்படுகிறார்கள். இளைஞர்கள் நிறையப் பேர் சினிமாவுக்கு வரவேண்டும். என்னையும் ரஜினியையும் தூக்கி சாப்பிடும் அளவுக்கு இளைஞர்கள் எழுந்துவர வேண்டும். நிச்சயம் வருவார்கள் என்றார் கமல்.

அதேநேரத்தில் என்னை யாரும் பிரசாரத்திற்கு கூப்பிடவும் இல்லை. கூப்பிடவும் மாட்டார்கள். அரசியல் என்ற கடலில் நீந்தும் அளவுக்கு நான் பலமானவன் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிருஷ்ண லீலா படத்திற்கு வைத்துள்ள தாடி, மீசையுடன் தற்போது கமல் காணப்படுகிறார்.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



நாவலர் கலாசார மண்டபத்தில் அழகுக்கலை பற்றிய பயிற்சி வகுப்பினை நடாத்தும் காமராஜர் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி பிரபாரெட்டி குழுவினரில் ஒருவராகிய ஹரணியையும் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பை வெல்லவைத்து நிலையான சுதந்திரத்தைப் பெற்றிடுவோம்

## சிற்றூர்தி உரிமையாளர் சங்க கூட்டத்தில் - இளம்பரிதி

ஒன்றாக ஒரு இலட்சியத்தின்கீழ் அணிதிரண்டு, தமிழர் தேசியக் கூட்டமைப்பை - எதிர்வரும் தேர்தலில் வெற்றியடையச்செய்து, தமிழ் மக்களின் நிலையான சுதந்திரத்தைப் பெறுவோம். இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

யா.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற - தனியார் சிற்றூர்தி உரிமையாளர், நடத்துநர், சாரதி, அங்கத்தவர்களுடனான சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

தற்போது தேர்தல் ஒன்று இல்லாதுவிட்டால், சமாதான நடவடிக்கையில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். தமிழர்களின் முக்கியத்துவம் காரணமாக மூன்று அமைச்சுக்களும் - ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்டு, ஆட்சி கலைக்கப்பட்டு, தேர்தல் ஒன்று நடைபெறப்போகின்றது. இந்தத் தேர்தல் - தமிழர் விடுதலைக்கான உந்துசக்திக்களமாக அமைந்துள்ளன. சர்வதேசரீதியில் தமிழர் போராட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தமிழ் இனம் இன்று அழிக்கமுடியாத நிமித்த இனமாக உலகத்தில் விளங்குகின்றது. தமிழ் இனத்தை அழிக்க நினைக்கும் எந்தச் சக்தியும், தன்மை அழிக்கவே செயற்படும் சக்தியாக மாறும். எமது போராட்டத்திற்கான சர்வதேச ஆதரவு, அங்கீகாரம் என்ன என்பதை எமது மக்கள் எதிர்வரும் தேர்தல்களில் வெளிப்படுத்தவேண்டும்.

தமது வாக்கை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்குவதன்மூலமே, இதனை உலகிற்கு உணர்த்த முடியும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் புலிகள் என்பதைச் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டவேண்டும். தமிழ் மக்களின் வாழ்க்கை சிறக்க, தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாக்கைப் பலப்படுத்த வேணடும்.



யாழ்.மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பலம் - குறைந்தது 94 வீதமாவது இருக்கவேண்டும். இதனடிப்படையில் ஒரு வேட்பாளருக்கு 71714 வாக்குகள் கிடைக்கவேண்டும். இவ்வாறு வாக்களித்தால், முதல் சுற்றில் 7 வேட்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யப்படுவர். பின்னர் போனஸ் ஆசனத்திற்கு ஒரு வேட்பாளரும், மிகுதி ஆசனத்திற்கு ஒரு வேட்பாளரும் தெரிவுசெய்யப்படும்.

தாய் மண்ணை நேசித்து, தனிப்பட்ட குரோதங்களை மறந்து தமிழர் தேசிய கூட்டமைப்பின் பலத்தை, எமது வாக்குகளின் பலத்தைகொண்டு மேலோங்கச் செய்ய வேண்டும்.

சிங்கள மக்கள் வாழவேண்டும் என நினைப்பவர்கள்-தமிழ் மக்களும் வாழவேண்டும் என நினைக்கவேண்டும். இந்தத் தேர்தலின் வாக்குகளே எமது விடுதலைக்கான ஆயுதம். நாம் ஒன்றுதிரண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றியடையச் செய்யவேண்டும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (தீ)

# தென்மராட்சி ஆசிரியர்களுக்கு செயலமர்வு இடம்பெறவுள்ளது

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயத்துகுட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இடம்பெறவுள்ளன. யுனிசெவ் ஆதரவில் நடத்தப்படவுள்ள இந்தச் செயலமர்வு - தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சமூகக்கல்வி, ஆரம்பக்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே இந்த செயலமர்வு இடம்பெறவுள்ளது.

சமூகக்கல்வி ஆசிரியர்கள் - எதிர்வரும் 12,13,19,20 ஆம் திகதிகளிலும், ஆரம்பகல்வி ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் 6 நாட்களும் இடம்பெறவுள்ளன.

இதன்படி தரம் 1 இற்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 12,13 ஆம் திகதிகளிலும், தரம் 2,3,4,5 இற்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு-26, 27 ஆம் திகதிகளிலும் இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வுக் கல்வி பற்றிப் போதிக்கப்படவுள்ளது. இந்தக் கருத்தரங்குகள் இடம்பெறள்ள இடங்கள் பற்றி கல்வி வலயம் பின்னர் அறிவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுகிறது. (25,44)

# மானுடம் சுடரும் தேசநிர்மாணத்தின் பங்காளிகளாக மகளிர் வரவேண்டும்

## பெண்கள் பண்பாட்டுமையம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் சமூகத்தின் அரைப்பகுதியினராகிய பெண்கள் - வலுவடைந்து, மானுடம் சுடரும் தேச நிர்மாணத்தில் செயல்முனைப்பான பங்காளிகளாக வரவேண்டும் என்பதே எமது வேட்கை என - மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் பண்பாட்டு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

மக்கள் தமது மேம்பாட்டுக்காக நடத்தும் போராட்டங்களில், மக்களின் பண்பாடு முக்கியமான பங்கு வகிக்கிறது. உகந்த பண்பாடு நிலவும்போதுதான் உகந்த விளைச்சலும் பெருகும்.

தமிழர் தாயகத்தைப் பொறுத்த மட்டில், நீண்டகால இராணுவ ஒடுக்குமுறை கூடுதலாகப் பெண்களைப் பாதித்திருக்கிறது. இதனால், பெண்கள் மத்தியில் வளர்ச்சிக்குத் தடையான பழமையும், சீரழிவும்கொண்ட பண்பாடு புரையோடிப்போயுள்ளது.

எனவே, இந்த மகளிர் தினத்திலிருந்து மேலும் எமது சிந்தனையைத் தீட்டுவோம். பெண்கள் வலுவடைவதற்கான பயிற்சிகளில் இணைய விரும்புவோர் - இல. 455, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள பெண்கள் பண்பாட்டு மையத்துடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசேட பொதுக் கூட்டம்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் - எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெவுள்ளது.

இந்த நிறுவனத்தால் நடாத்தப்பட்டுவரும் அச்சகத்தை நவீன முறையில் கணினி மயப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலுடன், மேலும் சில தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவுள்ளதாகச் சமாசப் பொது முகாமையாளர் பொ.செல்வராசா தெரிவித்தார். (91)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான கௌரவிப்பு

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால், 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பும், உதவித்தொகை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமாச அலுவலகத்தில் தலைவர் கி.தவராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

2002, 2003 ஆண்டுகளின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்றவர்களில் - சங்கத்தின் அங்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளுக்கே இந்தக் கொடுப்பனவும், கௌரவிப்பும் இடம்பெறவுள்ளதாகச் சமாச பொது முகாமையாளர் பொ.செல்வராசா தெரிவித்தார். (91)

# பாடசாலை அதிபர் ஆசிரியர்களும் பிரசாரப் பணிகளில் ஈடுபடலாம்

## பொதுச் செயலாளர் த.மகாசிவம்

அரசியல் உரிமைகள், இலங்கைக் குடியரசு யாப்பின் 9 ஆவது சட்டத் திருத்தமூலம் வழங்கப்பட்டுள்ளது. எனவே - இலங்கை அதிபர், சேவை வகுப்பு I, II, III இல் உள்ளவர்களும், இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு I, II-1, II-2, III-2 இல் உள்ள அனைவருக்கும் அரசியல் உரிமைகள் உண்டு. அரசியல் உரிமை என்னும் பொழுது கட்சிகளில் உறுப்பினர்களாக இருக்கலாம், கட்சிகளில் பதவிகளை வகிக்கலாம், தேர்தல்களில் வேட்பாளர்களாகவும் போட்டியிடலாம். பிரசாரம் செய்யலாம், கட்டுரைகள் வெளியிடலாம் என இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவக்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட அரசியல் உரிமைகளை அனுபவிக்காது அல்லது உபயோகிக்காது விட்டுவிட்டு, வேறு உரிமைகளைக் கோருவது சிறந்தது அல்ல. எனவே, சமூகத்தை வழிப்படுத்தவேண்டிய அதிபர்கள், ஆசிரியர்கள் முக்கியமான் தேர்தலை எதிர்கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில், முழுமையாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு, தமிழ் இனத்திறகு வழிகாட்டவேண்டியது மிகவும் அவசியமாகும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அடிப்படைக்கொள்கைகளில் ஒன்று - எமது தேசியமட்டத்திலும், சர்வதேச அரங்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழினத்தின் ஏகப்பிரதிநிதிகள். அவர்களுடன் பேசி, பிரிந்து போகின்ற சுயநிர்ணய உரிமையுடன்கூடிய கூட்டாட்சி என்ற அடிப்படையில் அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதாகும்.

இந்த அடிப்படைக் கொள்கைகளை முழுமையாகத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கி, பகிரங்கமாக வெளிப்படுத்தி இருக்கும் ஒரேயொரு கட்சி வீட்டுச்சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகும்.

எனவே, தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஆதரவாகப் பிரசாரங்களில் ஈடுபட்டு, அதன் வேட்பாளர்கள் முழுமையாக வெற்றிபெறச் சகலவிதங்களிலும் ஒத்துழைப்பை நல்குமாறு சங்கம் கோருவதாகப் பொதுச்செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது - சங்கத்தின் சகல கிளை, வலயச் செயலாளர்களையும் - தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களுடன் தொடர்புகொண்டு, அவர்கள் வெற்றி பெறுவதற்குத் தேவையான பிரசாரவேலைகளில் முழுமையாக ஈடுபடும்படியும் கோருவதாகச் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கியூடெக் நிறுவனம் நடத்தும் மகளிர்தின நிகழ்வுகள்

கியூடெக் மகளிர் அமைப்புக்களின் ஒன்றியத்தால் நடத்தப்படும் மகளிர் தின நிகழ்வுகள் - எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத் தலைவி பத்மா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு-கலாநிதி மனோன்மனி சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். 'பெண்கள் சமாதானத்திற்காக உழைத்தல்' எனும் கருத்துப் பொருளில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - 52 மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மகளிர் அமைப்புக்களினால் கலைநிகழ்வுகளும் ஆற்றுகை செய்யப்படவுள்ளதாகக் கியூடெக் நிறுவன மகளிர் அமைப்புக்களின் ஒன்றியத்தி ர் தெரிவித்தனர். (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : க.ஜதீபன்
முகவரி : மங்களபதி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:

முகவரி :



பிறந்த ஆண்டு:


கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்





# சிடி வேண்டாம்

ஆரம்பகாலங்களில் கொம்யூட்டாகளின் வருகை மிகவும் இனிப்பாகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. மற்றும் கொம்யூட்டர்களின் செயற்பாடுகள் ஆரம்பத்தில் நன்மை பயக்கக் கூடியதாகவே இருந்தது. தற்போது, கணினிகள் என்றாலே பிரச்சினையாகத்தானுள்ளது. கொம்யூட்டர் யுகம் என்று பேசப்படுகின்ற இந்தக் காலத்தில் மக்களின் வாழ்க்கையில் கொம்யூட்டர்களால் மிகவும் பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. இன்ரநெட் என்கின்ற கொடிய வில்லன் சிக்கல்களின் உச்சக்கட்டமாகத்தான் இருக்கின்றது. அதனைவிட கொம்யூட்டர் வைரஸ் அடுத்த தொல்லை. தற்சமயம் டிவிடி மூலம் பதிவுசெய்கின்ற சொவ்ட் வெயர் புறோகிறாமினை அமெரிக்க நீதிமன்றம் தடைசெய்திருக்கின்றது. ஏனெனில், அங்கே ஏற்பட்டிருக்கின்ற கணினி சம்பந்தமான பல சிக்கல்களைத் தீர்க்கும் முகமாகவே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் திருட்டு சிடிக்களும் ஒழிக்கப்படும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. திருட்டு சிடிக்கு கல்தா.




# செவ்வாய்க்கிரகப் படப்பிடிப்பு

செவ்வாய்க்கிரகத்தில் தற்போது நடைபெற்றுவருகின்ற தொடர்ச்சியான ஆராய்ச்சிகளின் பயனாகச் சிறப்பான முடிவுகள் பெறப்பட்டிருக்கின்றன. நாஸா விண்வெளி ஆய்வுகூடத்திலிருந்து எடுக்கப்பட்ட சில புகைப்படங்கள் முப்பரிமாணத் தோற்றங் கொண்டவையாகச் செவ்வாய் கிரகத்தினைச் சித்தரிக்கின்றன. ஆனால், இத்தகைய முப்பரிமாணத் தோற்றமுடைய படங்களை விசேட வகையான கண்ணாடிகளைக் கொண்டே பார்க்க முடியும் என ஆய்வாளர்கள கருதுகின்றார்கள். விண்வெளியில் காணப்படுகின்ற ஒரு செயற்கைக் கோளின்மூலமே இப்படியான படங்கள் எடுக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன.



சாதாரண கமராக்கள் எடுக்கும்படங்கள்போல இவை இருந்தாலும் முப்பரிமாணத் தோற்றத்தினை எமது மூளைஉணர வேண்டும் எனின், அதற்குரிய அந்த விசேடவகை மூக்குக் கண்ணாடியை அணிதல்வேண்டும். இப்படியான ஆராய்ச்சிகள் எல்லாம் செவ்வாய்க்கிரகத்தில் மனிதனுக்குள்ள ஆர்வத்தினை எடுத்துக்காட்டுவதாகவேயுள்ளது. மனிதன் செவ்வாயைப் படம் பிடித்துவிட்டான். இனிக்குடியேறும் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றான்.

# இறைச்சி வேண்டாமே



பிரித்தானிய நாட்டுமக்கள் கூடுதலாக குளிர்பிரதேசத்தில் வாழுபவர்கள். இதன் காரணமாக அவர்கள் அதிக கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தவிர்த்துக்கொண்டு வருகிறார்கள். அரசாங்கமும் இறைச்சி வகைகளை இறக்குமதி செய்வதைத் தவிர்த்துக் கொண்டுவருகிறது.

கோழி இறைச்சி மற்றும் மாட்டிறைச்சி ஆகியன சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் பரவிய கோழி நோய்கள் இதன்மூலம் நாட்டுக்குள் பரவாமல் தடுக்க முடியும் எனப் பிரித்தானிய அரசாங்கம் கருதுகிறது. இப்படியான தடைகள் மூலம் மக்கள் இறைச்சி சாப்பிடுவதைக் குறைக்கின்றார்களா? அதுதான் இல்லை.

பிரித்தானியாவில் உள்ள சில பகுதி மக்கள் அகப்படுகின்ற எல்லா விலங்குவகைகளையும் இறைச்சியாக்கி சாப்பிட்டுக்கொண்டு வருகிறார்கள். இதற்குக் காரணம் தாங்கமுடியாத இறைச்சிப்பசிதான் என்பதனைப் பிரித்தானிய நாட்டுமக்கள் ஒத்துக்கொள்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய 7431 தொன் சட்டவிரோத இறைச்சி வகைகள் நாட்டுக்குள் வருகின்றன எனப் பிரித்தானியாவின் மிருக ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர். ஐக்கிய இராச்சியம்மூலம் பிரான்ஸ் மற்றும் ஆர்ஜன்ரீனா ஆகிய நாடுகளுக்கும் இறைச்சி ஏற்றுமதியாகுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பசி தாங்கமுடியாத மக்கள் படும்பாடு.

# தேனே தேனே

தேனீக்கள் மகரந்தசேர்க்கைக்கு உதவுகின்றன. மேலும் விவசாய உற்பத்திக்கு தேனீக்கள் முக்கிய பங்குகினை ஆற்றிவருகின்றன. தேனீக்கள் பூக்களின் இருப்பிடங்களை நாடிச்செல்வதற்கு அவற்றில் காணப்படும் நறுமணமே காரணமாகும். பிரான்சில் - சோளம், சூரியகாந்தி ஆகிய பயிர்களில் காணப்படும் பீடைகளைக் கொல்வதற்குப் பாவிக்கப்படும் இமிடகொலோ பிறிட் எனப்படும் இராசயனப் பூச்சிகொல்லி தேனீக்கள் பூக்களை நாடிச்செல்லும் உணர்வினை (Sense of direction) அழித்துவிடுகின்றன. இதனால், தேனீக்கள் பாதை தெரியாது தடுமாற்றமடைந்து வேறு திசைகளில் சென்று மரணமடைவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளன.



தேன் சேகரிப்பதை தொழிலாகக் கொண்டவர்கள் (Apiarists) தேன் சேகரிக்க முடியாதுள்ளதாகவும் இதனால் ஒவ்வொரு ஆண்டும் 24000 தொன் தேனை இறக்குமதி செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இங்கிலாந்து பத்திரிகையான ஒப்சேவரின் கணிப்பின் பிரகாரம் இந்த வகையான பூச்சி கொல்லி மருந்து பாவனைக்குட்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளில் தேனீக்களின் உணர்திறன் குறைந்ததனால், பூக்களை நாடிச் செல்வதில்லை எனவும் அவற்றின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

# பிளாக்பேரி போன்




பிளாக்பேரி மொடல் கையடக்கத்தொலைபேசிகள் மக்களிடம் மிகவும்பிரபல்யம் பெற்றனவாகக் காணப்பட்டன. இது சாதாரண கையடக்கத் தொலைபேசிகளிலும் பார்க்கச் சற்று அகலமானவை. அத்துடன், கல்குலேட்டர் போன்று காணப்படுகின்றன. இது அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பிரமல்யம் பெற்றுக் கொண்டிருந்தன. இது, தற்போது சந்தையில் காணப்படுகின்றன மிகப்பிரபல்யமான மொடல் 7230 கிட்டத்தட்ட 65,000 நிறங்கள் மாற்றக்கூடியனவாகக் காணப்படுகின்றன.

அதனைவிட புதிதாக வந்திருக்கின்ற லேட்டஸ்ட் மொடல் 7730 ஆகும்.

இதுவும் கலர் திரையினைக் கொண்டது. இது கொம்பியூட்டர் வின்டோவினையும் கொண்டது. இது 136 கிராம் நிறையுடையது. 16 MB கொள்ளவுடையது. இதற்கு இணையாக சொனி எரிக்ஸன் P 900 என்ற கைத்தொலை பேசியைச் சந்தைக்கு விட்டிருக்கிறது. பிளாக்பேரி மொடல் வசதிகள் அனைத்தும் P 900 இல் காணப்படுகின்றது. இதனுடைய விலை 99 ஸ்ரோலிங் பவுண்களாக இருக்கின்றது. இதற்குரிய எல்லா அம்சங்களும் எதிர்காலத்தில் நொக்கியா மற்றும் சாம்சங் ஆகிய கைத்தொலைபேசிகளுக்கும் கிடைக்கலாம் எனக்கூறப்படுகிறது.

# புகையும் கண்ணும்



புகைபிடிக்கும் பழக்கத்தினால் கண்பார்வையைமனிதர்கள் முதுமையில் இழந்துவிடுவதாகப் பிரித்தானியாவில் பிரசுரிக்கப்படும் வைத்திய சஞ்சிகையொன்று தெரிவித்துள்ளது. புகைபிடித்தால் கண்பார்வை மங்கிப் போவதற்கு காரணமாக அமைவதாகவும் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 500,000 மேற்பட்ட மக்கள் தமது முதுமைக் காலத்தில் இவ்வகையான நோயினால் பாதிக்கப்படுவதாகவும் அச் சஞ்சிகை தெரிவித்துள்ளது. குறிப்பாக 60 வயதைக்கடந்து புகைபிடிக்கும் பழக்கம்கொண்ட ஒருவர் கண்பார்வை இழந்து விடுவதாகவும் தெரிவித்துள்ளது.


மேலும் புலன் உறுப்புக்களில் கண்பார்வையை இழந்துவிடுவது மிகுந்த பாதிப்பைக் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கண்ணின் பார்வை மங்கத்தொடங்கும்போது, அவற்றிற்கான சிகிச்சைகளை மேற்கொள்ளத் தவறினால் முதுமையில் பார்வைக் கோளாரை குணப்படுத்த முடியாதநிலை ஏற்படுவதாகவும் அந்தச் சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம்

# மீனவ நண்பன்

நியூசிலாந்து கடற்பிரதேசத்தில் 'மயூய்ஷ்' எனப்படும் ஒருவகை டொல்பின்கள் காணப்படுகின்றன.

இவை மீன்பிடிப்பதற்காக உபயோகப்படும். வலைகளில் சிக்கி, உயிரிழந்து கரையொதுங்குவதை விஞ்ஞானிகள் நீண்டகாலமாக அவதானித்து வந்தனர். இதனால், இந்தவகைப் பாலூட்டிகளின் நடமாட்டத்தை அவதானித்து, அவற்றுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியிருந்தது.



மேலும் கப்பல்களினதும், பெருந்தெருக்களில் பிரயாணங்களை ஒழுங்கு செய்வதற்கும் செயற்கைக் கோள்களைப் பாவித்து வருகின்றனர். செயற்கைக் கோள்மூலம் பாதையை அறியும் முறையையும், 'மயூய்ஷ்' டொல்பின்களின் நடமாட்டத்தை அறிவதற்கும் உபயோகிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இதன்மூலம் மீனவர்கள் தமது வலைகளை, இவை காணப்படாத பிரதேசங்களில் உபயோகிக்க முடியுமெனவும் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டத்தின்மூலம் ரேடியோ அலைகளைப் பரப்பக்கூடிய சிறிய ஊசியின் அளவிலமைந்த கருவிகளை இந்தவகை மீன்களின் செட்டைகளில் பொருத்தி வருகின்றனர்.

சிறிது காலத்தின்பின் செட்டைகளிலிருந்து வெளியேறக்கூடிய குறைந்த பாவனைக்காலம் கொண்டனவாகவும் அமைந்திருந்தன.

இந்தக் கருவிகளிலிருந்து வெளியேறும் ரேடியோ அலைகளின் சக்தியை செயற்கைக் கோள்கள் உள்வாங்கி (**Pickup**) நிலத்தில் அமைந்துள்ள தகவல் நிலையங்களுக்கு அறிவிப்பதன்மூலம் இவற்றின் நடமாட்டத்தை விஞ்ஞானிகள் அவதானித்து வந்தனர்.


இதன்மூலம் வலைகளை எவ்விடத்தில் பரப்பக்கூடாதென்ற தகவல்கள் மீனவர்களுக்கு அறிவிக்க முடிந்தது.

கடந்த 4 ஆண்டுகளில் 8 இற்கும் மேற்பட்ட டொல்பின்கள் நியூசிலாந்து கடற்கரையில் இறந்து காணப்பட்டன.

சென்ற ஆண்டு மரணமடைந்து ஒதுங்கிய டொல்பின்களின் எண்ணிக்கை ஒன்று மாத்திரமெனவும் தெரிவித்தனர்.

# உஷார் உஷார்

காட்டில் வாழும் மிருகங்களும், பறவைகளும் தம் இனத்திற்கு உயிராபத்து ஏற்படும்போது எச்சரிக்கை ஒலியை உருவாக்கி, தம்மை உஷார்படுத்திக் கொள்கின்றன. சில பறவைகள், மிருகங்கள் ஏற்படுத்தும் எச்சரிக்கை ஒலியினை அவதானித்து தமது நிலைகளைப் பலப்படுத்திக் கொள்வதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



மேலும் மிருகங்களின் எச்சரிக்கை ஒலிக்கும், சாதாரண ஒலிக்குமிடையே மாறுபாடுகளை அந்தப் பறவைகளினால் அவதானிக்க முடிவதாகவும் தெரிவித்துள்ளனர்.

முதல் முறையாக மிருகங்களுக்கும், பறவைகளுக்குமிடையே காணப்படும் இவ்வகையான உறவுகளை அவதானித்துள்ளனர்.

18 மாதங்களாக உயிரியல் விஞ்ஞானியான "கூகோ" இவ் ஆய்வினை மேற்கொண்டிருந்தார். ஆபிரிக்காவில் டயானா குரங்குகளில் இவ்வகையான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். மேலும் புலி ஒன்று தமது எல்லைப் பிரதேசத்திற்குள் வரும்போது, குரங்குகள் இவ் வகையான எச்சரிக்கை ஒலியை மேற்கொண்டபோது, இந்தப் பறவையினங்கள் எதுவித உணர்வுகளையும் காண்பிக்காது காணப்பட்டதையும் அவதானித்தனர். இவற்றிற்கான காரணத்தை அறிந்து கொள்வதற்கு மேலும் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.



புலி ஒன்றினால் தமக்கு எதுவித ஆபத்தும் ஏற்படப் போவதிலலை என்பதை இப்பறவைகள் உணர்ந்துகொண்டதாகவும் இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னர் மிருகங்கள் மத்தியில் எச்சரிக்கை ஒலிகளுக்கு தம்மை உஷார்படுத்திக்கொள்ளும் நிலை காணப்பட்டதை விஞ்ஞானிகள் அறிந்திருந்தனர்.

ஆனால், மிருகங்களின் எச்சரிக்கை ஒலிக்கு பறவைகள் தம்மை உஷார்படுத்திக்கொள்வதை அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திரை விமர்சனம்



# கண்களால் கைதுசெய்

பாரதிராஜாவின் கிராமப்புறக் கதையற்ற நகரத்தினை மையமாகக்கொண்டு எடுக்கப்பட்ட படம் இது. இந்தியாவிலேயே 5 ஆவது பணக்காரரான வசீகரன் அழகிய பொருட்களைச் சாமர்த்தியமாகத் திருடுவதில் வல்லவராகத் திகழ்கின்றான். ஒரு வைரக் கண்காட்சியில் - அவனது தொழில் போட்டியாளரான பிரதாப்பின் 10 கோடி ரூபா பெறுமதியான வைரத்தினைத் திருடிவிடுகிறான். சேல்ஸ் கேர்ள் ஆக இருந்த வித்யா (பிரியாமணி) இவனைச் சந்தேகப்பட்டாலும் அதனை ஒருவரும் நம்புவாரில்லை. ஆனால் வைரத்தினை இழந்த பிரதாப் மட்டும் இவளை வசீகரனுக்கு பி.ஏ. ஆக்குகின்றார்.

சிறு வயதிலிருந்து ஆயாவின் அரவணைப்பில் வளர்ந்த வசீகரன் ஆயா சொன்ன சின்ட்ரெல்லா கதைகளில் லயித்து அந்தக்கற்பனைப் பாத்திரத்துடன் ஒன்றிப் போகின்றான். அந்தப் பாத்திரத்தை வித்தியாவுடன் ஒப்பிட்டு அவளை மணக்க விரும்புகின்றான். ஆனால் அவள் முறைப்பையன் பிரேமினை விரும்புவது தெரிந்ததும் ஒரு கண்டிஷனுடன் வைரத்தினைத் திருப்பித் தரச் சம்மதிக்கிறான். அது 5 நாட்கள் செக்ஸ் இல்லாமல் வித்தியா தன்னுடன் வாழவேண்டும் என்பதுதான். அதுதான் கிளைமாக்ஸ். ஆங்கிலப்படப்பாணியில் பாரதிராஜா வெளுத்துக்கட்டியிருக்கின்றார். புதுமுகம் வசிகரன் அவ்வளவாக நடிக்கவும் இல்லை, சொதப்பவுமில்லை. பிரியாமணி - பாரதிராஜாவின் வழக்கமான புதுமுக அறிமுகம். நன்றாக நடிக்கவும் செய்திருக்கின்றார். வசனம் சுஜாதாவா? அடக்கடவுளே? கலை ஜி.கே. நன்றாகவே செய்திருக்கின்றார். ஏ.ஆர்.ரஹ்மான், என்னங்க ஸ்டாக் தீர்ந்துவிட்டதா? பாரதிராஜா இது உங்கபடமா? நம்பமுடியவில்லை.

- **PNS**

# செவ்வாயில் எரிமலை

ஐரோப்பாவில் - செவ்வாய் கிரகத்திற்கான கலத்தினால் எடுக்கப்பட்ட படங்களை ஆய்வு செய்தபோது அக்கிரகத்தில் நீர் காணப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.



"கெக்கேற்ஷ் தோலுஷ்" எனப்படும் 5300 மீற்றர் உயரம் கொண்ட மலையில் எரிமலை ஒன்று தோன்றியதற்கான ஆதாரங்களை அந் தக் கலத்தினால் எடுக்கப் பட்ட படங்களின் மூலம் காணநேர்ந்தது. வட்டவடிவமான பள்ளம் ஒன்று விஞ்ஞானிகளால் அவதானிக்கக் கூடியதாக அமைந்தது. கல்டெறா எனப் பெயரிடப்பட்ட இப்பள்ளம், எரிமலைக் குழம்பு (**MAGMA**) வெளியேறும் போதோ ஏற்பட்டிருக்கலாம் எனக்கருதியுள்ளனர். வட்டவடிவமான பள்ளத்தின் விளிம்பின் அமைப்பு நீர் வெளியேறியதற்கான சான்றுகளைத் தெரிவித்துள்ளது. 10 மீற்றர் விட்டமும், 600 மீற்றர் ஆழமும் கொண்ட இப்பள்ளம், எரிமலைக்குழம்பு வெளியேறியதனால் ஏற்பட்டது என்பதையும் ஊகித்துக் கொண்டுள்ளனர். மலையின் உட்பாகத்தில் காணப்பட்ட கனிப்பொருட்கள் வெப்ப அதிகரிப்பினால் திரவமாக மாற்றம் கண்டு பலமான விசையுடன் (**ERUPT**) வெளியேறும் நிலை இவ்வகையான பள்ளங்கள் பூமியிலும் எரிமலை வெடிக்கும்போது ஏற்படுகின்றது. மேலும் திண்மப் பொருட்கள் குழம்பாக மாறுவதற்கு நீர் அவசியமாகின்றது. இதனால் அசெவ்வாயிலும் நீர் உண்டு எனத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கார்களும் கணினி மயம்

கார்கள் தற்போது கணினி மயப்படுத்தப்பட்டு வருகின்றன. கார் சாரதி ஒருவரின் பணி பிரயாணத்தின்போது அதிகளவில் இலகுவாக்கப்பட்டுள்ளது. பிரயாணத்தின்போது வண்டியில் ஏற்படக் கூடிய தவறுகளைச் சாரதி முன்னரே அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.



சாரதியொருவர் வண்டி சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கிறதா என்பதை அறிந்த கொள்ளக் கூடியதாக செயற்கைக் கோள்களின் தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது. மேலும் கணினி வலைத் தொடர்புகளும் இணைக்கப்பட்டுள்ளன.

வண்டியொன்று வேகமாகச் சென்று கொண்டிருக்கும்போது, சாரதி பார்வை பாதையில் இருந்து விலக்கி, உள்ளே பொருத்தப்பட்ட கருவிகளைப் பார்வையிட வேண்டியுள்ளது. ஆனால், நவீன கார்களில் கேட்கும் தகவல்களுக்கு பதிலளிக்க கூடிய உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் செல்லிடத் தொலைபேசிகள் சாரதி உபயோகப்படுத்தும்போது, வண்டியை ஒரு கையினால் செலுத்தவேண்டியநிலை ஏற்படுகின்றது. இதனால் விபத்துக்கள் ஏற்படவேண்டிய சூழல் ஏற்படுகின்றது. ஆனால், தற்போது ஒலிச் சமிக்ஞைகள்மூலம் தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தமுடிகிறது. வண்டியொன்றில் பிரயாணம் செய்யும்போது பாதையின் முன் ஏற்பட்டுள்ள தடைகளை முன்னரே அறிந்து கொள்ள முடிகிறது.

இதனால் வேறு பாதைகளினூடாக வண்டியின் திசையை மாற்றக்கூடிய வசதிகளும் புதிய வடிவமைப்புக்களில் பொருத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XXIV - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

முதல் நாளே அந்த இளம்பெண அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போது அவர் தலைவலி எதுவும் இல்லாமல் நல்ல ஆரோக்கியமாக இருந்தார்.

அவரது கணவர் அந்தப் பெண்ணுக்குச் சத்திரசிகிச்சை செய்யவிருந்த மருத்துவரை அன்று மாலையில் சந்தித்து - மண்டையை பிளக்கும் அறுவைச் சிகிச்சை செய்யக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

அந்த மருத்துவரும் - அதெல்லாம் அப்படி ஒன்றும் நடக்காது. மண்டையில் லேசா துளை தான் போடுவோம் என்று உறுதிகூறினார்.

மறுநாள் 16 ஆம் திகதி காலை - எட்டுமணிக்குத் தனது ஒன்றரை வயது ஆண் குழந்தையைத் தூக்கி அணைத்து முத்தம்



கொடுத்துவிட்டு - கணவனுக்கும் ஆறுதல் சொல்லிவிட்டு, அந்தப் பெண் மருத்துவத் தாதிமாருடன் சத்திரசிகிச்சை அறைக்குச் சென்றார்.

மருத்துவர் சிறிய சத்திரசிகிச்சை என்று சொன்னது, ஆறு மணிநேரம் நீடித்த பெரிய சத்திர சிகிச்சையாகியது.

அந்தப் பெண்ணின் கணவர் - மகனைத் தூக்கி வைத்திருந்தவாறு மருத்துவமனைக்கு வெளியே பொறுமையின்றி உலாவிக்கொண்டிருந்தார்.

பிற்பகல் மூன்று மணிக்கு அவரது மனைவி இறந்துவிட்டதாக அவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதிர்ந்துபோன அவர், ஏன் அப்படி நடந்ததென்று விசாரிக்க... அந்த மருத்துவர் அங்கே இருக்கவில்லை.

கடைசியாக அந்தப் பெண்ணின் உடலை அவரது கணவனுக்குக் காட்டியபோது - அவளது மண்டை முழுவதும் கட்டுப்போடப்பட்டிருந்தது.

அந்த மருத்துவர் சொன்னபடி சிறிய துளைபோட்டு -அந்தப் பெண்ணின் மூளையில் இருந்த கட்டியை அகற்றமுயலவில்லை. தலைமயிரை முற்றாகமழித்து, மண்டை ஓட்டைப் பிளந்தே அந்தக் கட்டியை அகற்ற முயற்சித்திருக்கிறார்.

தன்னுடைய பெயரை, வெளியிட விரும்பாத அந்த மருத்துவமனை ஊழியர் ஒருவர்- அந்தச் சத்திரசிகிச்சையை அந்த மருத்துவர் செய்யவில்லை என்றும், அவரது மேற்பார்வையில் புதிதாகப் பயிற்சி எடுக்கும் மருத்துவர்களே செய்ததாகவும் அந்தப் பெண்ணின் கணவரிடம் தெரிவித்தார்.

அந்த மருத்துவருக்கு எதிராக ஒரு சட்டவாதிமூலமாக வழக்குப் போடுவதற்கு அவர் முயன்றபோது, அந்த மருத்துவர் 6 மாத விடுப்பில் இஸ்ரேலுக்குச் சென்றுவிட்டதாகத் தெரியவந்தது.

அதைவிட மண்டையை பிளந்து மிகவும் கடினமான சத்திர சிகிச்சை ஒன்றை செய்வதற்கு அந்தப் பெண்ணின் கணவர் சம்மதம் கொடுத்ததுபோலவும் படிவங்கள் நிரப்பப்பட்டிருந்தது.

பிரஞ்சுமொழி நன்றாகத் தெரியாத அவர்களை ஏமாற்றி, அந்த மருத்துவர் கையொப்பம் வாங்கியதாக அந்தப் பெண்ணின் கணவர் கூறியபோதும், அதை நிரூபிப்பதற்கு எந்தவிதமான சாட்சியும் அவரிடம் இருக்கவில்லை.

இதேபோல, அதே மருத்துவமனையில் 'கோணேஸ்' பகுதியில் வசித்துவந்த 48 வயதுடைய தமிழர் ஒருவர் - குடல் வால் அழர்ச்சி நோய்க்கு சத்திரசிகிச்சை செய்வதற்காக அந்த மருத்துவமனைக்கு அதே 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்றார்.

அவர் தானே காரை ஓட்டிச்சென்று மருத்துவமனைத் தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டு சென்றார்.

டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி அவருக்குக் குடல் வால் அழர்ச்சி (அட்பெண்டிசைட்) நோய்க்கான சத்திர சிகிச்சை நடந்தது.

மறுநாள் காலை 7 மணிக்கு வயிறு வீங்கி உடலெங்கும் மஞ்சள் நிறமாகமாறி அவர் இறந்துவிட்டார்.

அந்த சத்திரசிகிச்சையை செய்த மருத்துவர் தவறுதலாகப் பித்தப்பையைச் சேதப்படுத்திவிட்டதாகவும், பித்தம் வெளியேறி இரத்தத்தில் கலந்து கிருமித்தொற்று ஏற்பட்டு அவர் இறந்துவிட்டதாகத் தெரியவந்தது.

மருத்துவமனை நிர்வாகம் அவர் மிகவும் ஆபத்தான கட்டத்திலேயே மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டதாகவும், குடல்வால் நோய் முற்றி அந்தப் பகுதி வெடித்துவிட்டநிலையிலேயே, சத்திரசிகிச்சை செய்யப்பட்டதாகவும் கூறியது.

நோய் முற்றி வயிற்றுக்குள் ஒரு பகுதி வெடித்தநபர் எப்படி கார் ஓட்டிச்சென்றிருக்க முடியும்?

எப்படி தனியாகத் தானே நடந்து சென்று மருத்துவமனையில் சேர்ந்திருக்கமுடியும்? என்றெல்லாம் கேள்வி எழுப்பப்பட்டது.

4 பிள்ளைகளுக்குத் தந்தையான அவரது மரணம் தொடர்பாக அவரது மனைவி மருத்துவமனை நிர்வாகத்தின் மீதும், அந்தச் சத்திர சிகிச்சையைச்செய்த மருத்துவர் மீதும் வழக்குத் தொடுத்திருந்தார்.

இரண்டு வருடங்கள் நீடித்த விசாரணையின் பின் அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்றுகூறி, அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இன்னொரு தமிழர் பாரிசிலுள்ள இன்னொரு மருத்துவமனைக்கு அதே குடல்வால் அழர்ச்சி நோய்க்கு சிகிச்சைபெறுவதற்காகச் சென்றிருந்தார்.

மார்ச் மாதம் 10 ஆம் திகதி அவருக்குச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

மறுநாள் 11 ஆம் திகதி அவருக்கு வயிற்றுவலி தாங்கமுடியாமல் கஷ்டப்பட்டார்.

வயிற்றுக்குள் கிருமித்தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பிய மருத்துவர்கள், அன்று இரண்டாவது தடவையாகச் சத்திரசிகிச்சை செய்து, ஏற்கனவே வெட்டப்பட்ட குடல்வால் பகுதியை சுத்தம்செய்து, வயிற்றை மூடித் தைத்துவிட்டனர். 14 ஆம் திகதி அவரை வீட்டுக்குச் செல்லலாம் என்று கூறி அனுப்பிவிட்டனர்.

16 ஆம் திகதி இரவு அவருக்கு மீண்டும் வயிற்றுக்குள் பிரச்சினையாக வாந்தி, மயக்கம் எல்லாம் ஏற்பட்டது. பயந்துபோன அவரது மனைவி, அவரை பாரிஸிலுள்ள பிரபலமான மருத்துவமனை ஒன்றில் கொண்டு போய்ச்சேர்த்தார்.

அந்த மருத்துவமனை மருத்துவர்கள் அந்த நோயாளியைச் சோதித்துப் பார்த்தபோது, அவருக்குச் செய்யப்பட்ட சத்திரசிகிச்சையில் தவறு நடந்துள்ளதை கண்டுபிடித்தனர்.

அந்தச் சத்திரசிகிச்சை நேரத்தில் அவருக்கு கிருமி தொற்று ஏற்பட்டு - அது தீவிரமாக இரத்தத்தில் கலந்துவிட்டதையும் - அந்த நோயாளி ஆபத்தான கட்டத்தில் இருப்பதையும் உணர்ந்தனர்.

இரத்தத்தை முற்றாக மாற்றி அவருக்கு சிகிச்சை அளிக்க அந்த மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர்கள் முயன்றபோதும், அவரை அவர்களால் காப்பாற்றமுடியவில்லை.

32 வயதான 4 வயது பெண் குழந்தைக்கு தந்தையான அந்தத் தமிழ் இளைஞர் - மார்ச் மாதம் 17 ஆம் திகதி இரவு இறந்துவிட்டார். அவருக்குச் சத்திரசிகிச்சை செய்த மருத்துவமனை நிர்வாகத்துக்கு எதிராகவும், அவருக்கு சத்திரசிகிச்சை செய்த மருத்துவருக்கு எதிராகவும் - இறந்தவரின் மனைவி தொடர்ந்த வழக்கு - கடைசியாக அவர் உயிரிழந்த மருத்துவமனை மருத்துவர்கள் கொடுத்த மருத்துவ அறிக்கை உதவியாக அமைந்தது. அந்த வழக்கில் அந்தப் பெண்ணுக்கு நட்டஈடும், அந்த மருத்துவருக்குத் தண்டனையும் வழங்கப்பட்டது. அந்தப் பெண் இந்தச் சம்பவத்துக்குப் பின்பு பிரான்சில் இருக்கப் பிடிக்காமல், கனடாவில் இருந்த சகோதரர்களுடன் வாழ்வதற்குச் சென்றுவிட்டதால், இந்த வழக்கின் தீர்ப்பு விபரங்களை திரட்டமுடியவில்லை.

பிரான்சில் மட்டுமல்லாமல் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழமுற்பட்ட ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நெதர்லாந்து போன்ற நாடுகளிலும் - வெளியேவராமல் அந்தந்த நகர வட்டங்களுக்குள்ளேயே அடங்கிப்போன இவ்வாறான பல அவலங்கள் இருக்கின்றன.

நான் 1993 ஆம் ஆண்டிற்கும் 1995ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பாரிஸில் மட்டுமே அதிகளவுக்குக் கள ஆய்வில் ஈடுபட்டதால், பாரிஸில் நடந்த சம்பவங்கள் பற்றிய தகவல்களையே அதிகம் திரட்டமுடிந்தது. இதற்காக மற்ற நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் கஷ்டப்படவில்லை. பாரிஸில் உள்ள புலம்பெயர்ந்தவர்கள்தான் கஷ்டப்படுகின்றார்கள் என்று நினைத்துவிடக்கூடாது.

இந்த மருத்துவமனைக்கு அவலங்கள் மற்றும் உடல் நலக்கேட்டால் நேரும் மரணங்கள் தொடர்பாக - பல மருத்துவ நிபுணர்கள் மற்றும் சமூகசேவை அமைப்புக்கள், புலம்பெயர்ந்த மாற்று இனங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்று பல தரப்பினருடனும் விரிவாகக் கலந்துரையாடினேன்.

மருத்துவ நிபுணர்களைப் பொறுத்தவரை அவர்கள் தாங்கள் ஒன்றும் கடவுள்கள் அல்ல, மனிதர்களே என்றும், மனிதர்கள் தவறு விடுவதற்கு சாத்தியம் இருக்கிறது என்பதையும் ஒத்துக்கொண்டார்கள். ஆனால், பிரச்சினை என்னவென்றால் - ஒரு நோயாளிக்கும் மருத்துவனுக்கும் உள்ள உறவென்பது மொழிசார்ந்தது என்றும் - முதலில் நோயாளி தன்னுடைய நோயைப்பற்றி மனந்திறந்து மருத்துவரிடம் சொல்லவேண்டும் என்றும், நோயாளி தனது உடல்நிலை பற்றி, தன்னுடைய பாதிப்புக்களைப் பற்றி மருத்துவருக்குச் சொல்லாதபட்சத்தில், மருத்துவரால் அவருக்கு உரியசிகிச்சை அளிக்க முடியாமல் போய்விடுகிறது என்றும் கூறினார்கள். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் புலம்பெயர்ந்த நாட்டு மொழியறிவு குறைந்தவர்களாக இருப்பதால், மருத்துவர்களுக்கும் - நோயாளிக்கும் இடையிலான தொடர்பாடலில் ஏற்படுகின்ற பிரச்சினையே பாரிய தவறுகளுக்கு வித்திடுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேபோல் - அல்ஜீரியா நாட்டு தொழிலாளர்கள் அமைப்பு ஒன்றின் தலைவராக இருக்கும் - ஹலீல் என்பவர் தெரிவித்த கருத்தும் கண்டிப்பாக குறிப்பிடவேண்டிய ஒன்று.

மேற்குலக நாடுகள் என்னதான் சமத்துவம் - சகோதரத்துவம் பேசினாலும், அவர்களைப் பொறுத்தவரை வெளிநாட்டு அகதிகள் எல்லாம் நவீன அடிமைகள்தான். பரிசோதனைக்கூடத்தில் விஞ்ஞானிகள் எலி, தவளை போன்றவற்றில் தங்கள் ஆய்வுகளைச் செய்வதைப் போலத்தான், இந்த மேற்குலக மருத்துவர்கள் தங்கள் மாணவர்களுக்கு, உதவியாளர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு அகதி நோயாளிகளைப் பரிசோதனைப் பொருட்களாகப் பயன்படுத்துகின்றனர்.

ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்ந்த மக்களிலே நம்மவர்களைப்போல் - இன்னும் சொல்லப் போனால் நம்மவர்களைவிட அதிகம் கஷ்டப்பட்டவர்கள் ஆபிரிக்கர்கள்.

கன்னங்கரிய நிறம், பரட்டைத் தலை, சமச்சீரற்ற முக அமைப்பு, தடித்த உதடுகள், தடித்த குரல் இதையெல்லாம் பார்த்து - இவற்றை வைத்து அவர்களை மனிதர்களாகவே மதிப்பதற்கு - கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஐரோப்பியர்கள் தயாராக இருக்கவில்லை. ஏசினார்கள், தூற்றினார்கள், ஓடஓட விரட்டினார்கள்.

ஆனால் அவர்கள் துவண்டுவிடவில்லை, அழிந்துவிடவில்லை. வெள்ளை இனவாதத்துக்கும், நிறவாதத்துக்கும் அடிபணிந்துவிடவில்லை. ஒரு தலைமுறை குனிந்து, பணிந்து, கூனிக்குறுகி அடிமைச் சேவகம்செய்ய, அடுத்த தலைமுறை நிமிர்ந்தது. அடையாள மறுப்பையும் கட்டுடைப்பையும் ஆயுதமாக எடுத்தது.

'நீ கறுப்பன்' என்று எந்த வெள்ளை நிறத்தவனாவது அவர்களை இழிவு செய்தால்- 'நீ வெள்ளையன் வெளிறிப்போனவன்.' கறுப்பு என்பதுதான் முதன்மைநிறம், மற்றதெல்லாம் அதற்குக் கீழேதான் என்று இடித்துரைக்கப் பழகினார்கள். தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால், அதற்காக துணிந்து நியாயம் கேட்டார்கள், சண்டைபிடித்தார்கள்.

தங்களுக்குள் ஆயிரம் பேதங்கள் இருந்தாலும், தாங்கள் 'கறுப்பர்கள்' என்ற அடிப்படையில் வெள்ளை இனவாதம் - நிறவாதத்துக்கு எதிராக ஒன்று திரண்டார்கள்.

ஒருகாலத்தில் கறுப்பன் என்றால் அவனை ஏமாற்றிவிடலாம் - அவனுக்கு ஒன்றும் தெரியாது என்றிருந்தநிலையை மாற்றி, அவர்களுடன் பிரச்சினைக்கு போகக்கூடாது. அவர்களை ஏமாற்றினால் பிரச்சினைவரும் என்று மற்றவர்கள் பயப்படும் ஒரு நிலையை உருவாக்கி, தங்களுக்கு எந்தவிதத்திலும் சொந்தமில்லாத, ஆனால், தங்களது உழைப்பை உறிஞ்சி உருவாக்கப்பட்ட அந்நியநாட்டில் தங்களது இருப்பை அவர்கள் உறுதிப்படுத்தியது முக்கியமானதொருவிடயம்.

இன்றைக்கு பிரான்சிலே ஆபிரிக்க கறுப்பு இனத்தவர்கள் பிரஞ்சுமொழியை பேசினாலும், தங்களது அடையாளத்தை இழந்துவிடாது, தங்களுடைய அடையாளச் சின்னமான அந்த மேளத்தை இன்னும் பாரிஸ் நகர வீதியோரத்தின் மரநிழல்களில் வைத்து அடிக்கின்றார்கள், எல்லோரும் ஆடிப்பாடுகின்றார்கள்.

ஆனால், தமிழர்களான நாங்கள் - தமிழர்களின் தனித்துவமான இசைக்கருவியான பறையை என்ன செய்திருக்கிறோம்? இந்த இடத்திலே கவிஞர் காசியானந்தனது கவிதை நறுக்குத்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

"நாங்கள் பறையை மட்டுமல்ல
பறையடிப்பவரையும் ஒதுக்கிவிட்டோம்"

(தொடரும்)

## பார்வைகள் பதிவுகள் பகிர்வுகள்

தமிழில் (புகைப்பட) ஒளிப்படக்கலை தமிழ்ச்சூழலில் விருத்திபெருக - விருத்த பெற சந்தர்ப்பம் வழங்கப்படாத துறை ஒளிப்படக்கலை. ஆயினும், சில தமிழர்கள் சர்வதேச அளவில் ஒளிப்படக் கலையில் சிறப்புற்று விளங்குகின்றனர். இவர்களில் ஒருவர் ஐசக் கருணாகரன். தமிழகத்தைச் சேர்ந்த ஜோன் ஐசக் கருணாகரன் எனப்படும் இவர், ஒரு ஐ.நா. ஒளிப்படப் போட்டி ஒன்றின் ஊடாக ஐ.நா. விற்குள் நுழைந்து, உலகம் பூராவும்போர் நடந்த நாடுகளின் மக்கள் அவலங்களை வெளிக்கொணர்ந்தவர். குறிப்பாக அவர் அகதிகளின் பிரச்சனைகளை ஒளப்படங்களினுடாகக் கொண்டுவந்தவர். ஐ.நா. வெளியீடுகளில் ஜோன் ஐசக் என்ற பெயரில் இவரது படங்கள் இருக்கும். இலங்கையில் புகழ்பெற்ற சிங்கள ஒளிப் படக் கலைஞரான நிகால் பெர்னாண்டோவுடன் இணைந்து செயற்பட்ட லக்ஸ்மன் நடராஜா என்பவர் சிறந்த படங்களை எடுத்தவராவார். மற்றும் தமிழ் ஒளிப்படங்கள் தமிழர்களால் எடுக்கப்பட்டாலும், அவர்கள் வெளிப்படச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. பிரசார ஊடகங்கள் தமிழக ஆரம்பப் பத்திரிகைகளின் பாணியிலேயே ஒளிப்படங்களைப் பிரசுரிக்கின்றன. அதனால் சிங்கள, ஆங்கில நாளேடுகள் அளவில் தரமான செய்தி அல்லது ஏனைய வகைப்படங்களிற்கு சந்தர்ப்பம் வழங்குவதில்லை. இது ஒரு குறிப்பு. இங்கு நாம் குறிப்பிட வந்தது- இலங்கைத் தமிழர் தாயக ஒளிப்படங்களைக் காணும் சந்தர்ப்பங்களைப் பற்றி அறிமுகம் செய்வதே ஆகும்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல நிகால் பெர்னாண்டோவின் ஸ்ருடியோ டைம்ஸ் நிறுவனம் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளை ஒளிப்பட ஆவணமாக்கியுள்ளது. இதனை பெரும்பாலும் நிறைவேற்றியவர் நிகால்பெர்னாண்டோ. இவர் தம் ஒளிப்படங்களை இணையத்தளம் WWW.STUDIO TIMES .NET இதில் இலங்கையின் வனப்புமிக்க காட்சிகள் உள்ளன.

வனம் - வனவுயிர்கள், மனிதர்கள், தொழிற்துறை, நிலக்காட்சிகள், கடற்கரைகள், தொல்லியல்வளங்கள் என்கின்ற தலைப்புகளில் இந்த தளத்தில் படங்கள் உள்ளன.

வனப்புமிக்கதாகப் புதிய கோணங்களில் இதில் படங்கள் இருக்கின்றன. தமிழர் தாயகத்தில் கிழக்கின் படங்கள் இதில் அதிகம் இடம்பெற்றுள்ளன.

DOMINIC SUN SONI.COM என்ற இணையத்தளம் ஆசிய நாடுகளின் ஒளிப்படங்களைக் கொண்டுள்ளது. ஒளிப்படக்காரர் டொமினிக் சன்சோனி, தான் எடுதத படங்களை இதில் காட்சிப்படுத்தியுள்ளார். இதில் இலங்கைக்கும் ஒரு பக்கம் வழங்கியுள்ளார். சன்சோனி மிகச் சிறந்த பேச்சாளர். ஒளிப்பட ஒப்பனைக்காக அண்மையில் வடபகுதிக்கு வந்துசென்றுள்ளார். இவரது படங்கள் மிகமிக சிறந்ததாக, புதிய கண்ணோட்டத்தினை தருவதாக, தரமாக உள்ளன. அண்மையில் யாழ்.ஊர்காவற்துறை பகுதியில் படமொன்றையும் இவர் தளத்தில் இணைத்துள்ளார். தமிழர் தாயகத்தில் கிழக்கு பகுதியை இவர் அதிகளவில் படமாக்கியுள்ளார். கிழக்கு கடற்கரை வனப்புக்கள் இவரது கோணத்தில் புதிய தோற்றத்தில் வந்துள்ளன. கூடுதலாகக் கிழக்குக் கடற்கரைகளில் இவர் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார்.

இவைதவிர, தமிழர் தாயக ஒளிப்படங்களைத் தாங்கிய EELAVISION. COM என்ற இணையத்தளம் அண்மையில் ஆரம்பமாகியுள்ளது. இது தமிழர் தாயகப் படுகொலை காட்சிகளைக் கொண்ட ஒளிப்படங்களைக் கொண்டதாகும். தமிழர் தாயக இயற்கை வாழ்வு, போரின் பின்னணி, தொழிற்துறை ஆகிய தலைப்புக்களை உள்ளடக்கி அமைந்துள்ள இணையத்தளம், 3 ஆசிய நாடுகளைத் தளமாகக் கொண்டுள்ளது. இவை தவிர தமிழர் தாயகப்படங்கள் உதிரியாக ஆங்காங்கு வெளிவருகின்ற போதும், அவை உரியமுறையில் பயன்படுத்தப் படாதுள்ளது. வன்னியிலிருந்து வெளிவரும் 'தேதுள்ள' சிங்கள ஏடு ஒளிப்படங்களுக்கு அதற்குரிய மதிப்பை வழங்கி பிரசுரித்து வருகின்றது. மற்றும் பல ஊடகங்கள் நல்ல ஒளிப்படங்களுக்கு உரிய மதிப்பினை வழங்காததால். தமிழ் ஒளிப்படக்காரர்கள் அறிமுகங்களையோ, மேம்பாடுகளையோ எட்ட முடியாதுள்ளனர்.

- திரு.த.திரு

யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்*
*சீறின் சிறுகும் திரு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## கிழக்கு மக்களின் வரலாற்றுக் கடமை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைப் பீடத்தால் சகல பொறுப்புக்களிலிருந்தும் நீக்கப்பட்டுள்ள கருணாவினால் மட்டு - அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையை தமக்கு சாதமாகப் பயன்படுத்த தேசவிரோத மற்றும் இனவிரோத சக்திகள் பல்வேறு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கிழக்குச் செய்திகள் கூறுகின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இறுக்கமான கட்டுமான வலுவைச் சிதைக்கவும் தமிழ்த்தேசியத்தின் தலைமையைப் பலவீனப்படுத்தவும் முனையும் உள்ளூர் மற்றும் அந்நிய சக்திகளின் பொறிக்குள் வீழ்ந்துவிட்ட கருணா என்ற தனிமனிதன் தனது பலவீனத்தை தனது செயற்பாடுகள் மூலம் பகிரங்கப்படுத்திவரும் இந்த வேளையில் அவரது இந்தப் பரிதாபகரமானதும், அவமானத்துக்குரியதுமான வீழ்ச்சிநிலைக்கு காரணமான பின்புல சக்திகள் தொடர்ந்தும் அவரை கிழக்கு வாழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் வகையில் அவரது குழுவினர் என்று சொல்லிக்கொண்டு மட்டு - அம்பாறை மாவட்டங்களில் பிரதேசவாத வெறியைத்தூண்டும் வகையிலான நிகழ்வுகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இது எதிர்பார்த்த நிகழ்வுதான்.

பலவீனமான துரோகிகள் கையாலாகாத நிலையில் இப்படிப்பட்ட பொதுமக்களைத் திசைதிருப்பும், அச்சுறுத்தும், அவலத்துக்குள்ளாக்கும் செயல்களில் ஈடுபடுவதென்பது இயல்பான ஒன்றேயாகும்.

அதுவும் அந்நிய சக்திகளின் தூண்டுதலின் பேரில் அவர்களின் சுயநல அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக தனது இனத்தின் சுயத்துவத் தன்மையையும் தனது சுயத்துவ ஆளுமையையும் அடகுவைக்கத் துணிந்து தன்னிச்சையாக தனது சுய இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ளும் அற்பத்தனமான அபிலாஷைகளுடன் செயற்படும் கருணா - தனது நடவடிக்கைகள் தனது சொந்த இனத்துக்கு எத்தகைய பாதிப்புக்களை வரலாற்று ரீதியில் ஏற்படுத்தும் என்பதை அறிந்து கொள்ள சுயபுத்தியில் இயங்குபவராக இல்லை.

மட்டு - அம்பாறை பகுதியில் வாழும் - தமிழ் மக்கள் கருணாவின் செயற்பாடுகளால் மனம்நொந்து குழப்பமடைந்துள்ளனர்.

அங்குள்ளவடபகுதி மக்கள் கருணாவின் அடியாட்களாக மாறிவிட்டுள்ள பிரதேசவாத வெறிகொண்டுள்ள மக்களால் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியுள்ளனர். கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மிரட்டப்பட்டு, வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளதாகவும், நூற்றுக்கணக்கில் மாணவர்கள் பாதுகாப்பு கருதி வெளியேறிவிட்டதாகவும் அறியப்படுகிறது. இவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா போன்ற வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளுடன் மீண்டும் இணைய விருப்பம் தெரிவித்து அதற்கு அவர் விடுத்துள்ள நிபந்தனைதான் கருணாவின் மீதான சந்தேகங்களை மேலும் அதிகரிப்பதாக அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் மூன்று முக்கிய துறைகளின் பொறுப்பாளர்களை நீக்கினால் தான் மீண்டும் இணைவாராம்!

தான் தனித்துச் செயற்பட தீர்மானித்தமைக்கு அவர் முதலில் கூறிய தனது 'பிரதேச பாச'க் காரணம் இதன் மூலம் அடிபட்டு போய்விட்டுள்ளது.

தாயக விடுதலைப் போராட்டத்தை இலட்சிய இலக்குகளுடன் முன்னெடுக்கும் வலுவான விடுதலை இயக்கத்தின் தலைமைக்கு யார் யாரை எந்த எந்தப் பொறுப்பில் அமர்த்த வேண்டும் என்பது தெரியும். ஒரு தனிமனிதனின் அபிலாஷைக்காக, உறுதியான ஒரு கட்டமைப்பை மாற்ற வேண்டிய அவசியமே கிடையாது.

இப்படியான நிபந்தனையொன்றினை திடீரென்று கருணா முன்வைத்து கோரிக்கை விடுத்துள்ளதுதான் கோமாளித்தனமாக உள்ளது.

எதையும் கேட்பதற்கு ஒருமுறை உள்ளது. தேசியத் தலைவருடன் மிகவும் இறுக்கமான உறவை வைத்திருந்த, அவரின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்த கருணா தன்மன ஆதங்கத்தை, விருப்பத்தை, தேவையை அவருக்கு தெரியப்படுத்த எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருந்தபோதும், அவர் இப்படி ஒரு நெருக்கடி நிலையை தோற்றுவித்துவிட்டு இதனைக் கேட்பது அவரின் பின்னணியில் இருக்கும் அந்நிய சக்தியின் தொனியாகவே இருப்பதை உணரமுடிகிறது.

அவருக்குத்தெரியும் - தமிழர்களின் தேசியத்தலைவர் எத்தகைய உறுதியும் மனோபலமும் கொண்டவர் என்பது.


ஹர்த்தால், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் மூலம் தமது தவறுகளை கருணா குழுவினர் நியாயப்படுத்த முனைவதாகத் தெரிகிறது.

இது அவர் நினைக்கும் தாக்கத்திற்கு முரணான விளைவுகளையே எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்பது உறுதி.

இதேவேளை, பதவி நீக்கப்பட்ட 'கருணா' வினால் மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கிழக்கின் மூத்த உறுப்பினர் கரிகாலன் அவ்வாறு அறிவிக்கப்பட்ட சிலமணி நேரத்தில் வன்னிக்கு வந்து 'கருணா'வை பொல்பொட் என வர்ணித்து அந்நிய சக்திகளின் தூண்டுதலின் பேரில் அவர் செயற்படுகிறார் என்று உண்மையை வெளிப்படுத்தியுள்ளமை கருணாவின் நிஜ முகத்தை உலகிற்கு தெரியப்படுத்தியுள்ளது. இது அவருக்கு கிடைத்த முதல் தோல்வியுமாகும். இந்த நிலையில் மட்டு- அம்பாறை மாவட்ட மக்கள் மனஉறுதியுடனும், நம்பிக்கையுடனும் செயற்பட்டு தேசியத் தலைமையை வலுப்படுத்தி, அந்நிய சக்திகளின் தூண்டுதலின் பேரில் இயங்கும் துரோகிகளை புறந்தள்ளி தமிழ்மக்களின் அவர்கள் இந்த வரலாற்று கடமையை சரிவரச் செய்வார்கள் என்பதை அடுத்துவரும் நாட்கள் உணர்த்தும்.

# நாடும் நடப்பும்

கதிர்காமரின் தேர்தல் கரணங்கள்




# தேர்தல் சுவரொட்டிகளுடன் சேர்த்து விளம்பரங்களும் அகற்றப்படுகின்றன

தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பொலிஸாரால் விளம்பரங்களும் அகற்றப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது தேர்தல் மோகம் யாழ்.குடாநாட்டைச் சூழ்ந்துள்ள நிலையில், வீதி ஓரங்களில் உள்ள மதில்கள், தகரங்கள, வீடுகள் மற்றும் பொதுஇடங்களில் ஆயிரக்கணக்கான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன.

இந்தத் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பணியில் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களால் தேர்தல் சுவரொட்டிகள், மதநிறுவனங்கள், திரையரங்குகள், முதலானவற்றின் விளம்பரங்களும் அகற்றப்பட்டு வருகின்றன.

இதனால் விளம்பரங்களை ஒட்டிய நிறுவனங்கள், இந்தச் செயலை ஓர் அடிப்படை மனித உரிமைமீறலாகச் சுட்டிக்காட்டி உள்ளதுடன் விசனமும் தெரிவித்தனர்.

இது குறித்து மனித உரிமை அமைப்புக்களிடம் முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சில மதத்தலைவர்களும், வர்த்தக நிறுவனத் தலைவர்களும் தெரிவித்தனர். (ப)

# அரச ஊடகங்கள் பாகுபாட்டுடன் இயங்குவதாக முறையிடமுடியாது

## லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

ஐக்கிய தேசியக்கட்சி - அரசாங்க ஊடகங்களை பகிஷ்கரித்து வருவது குறித்து ஆச்சரியமடைந்துள்ளதாக தகவல் துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி சகல அரசாங்க ஊடகங்களையும் பகிஷ்கரித்து வருவதில் அந்த ஊடகங்கள் பாகுபாட்டுடன் செயற்படுகின்றது என்று முறையிடமுடியாது என்று அமைச்சர் கூறினார்.

எதிர்வரும் தேர்தல் தொடர்பாக தொலைக்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும், இந்த நிகழ்ச்சியில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எவரும் கலந்துகொள்ளவில்லை.

அரசாங்க ஊடகங்களில் இடம்பெற்றுவரும் அரசியல் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளுமாறு அமைச்சர் கதிர்காமர் ஐக்கியதேசியக் கட்சிக்கு வேண்டுகோள் விடுத்தார்.

# சமுர்த்தி வங்கி பணியாளர்களுக்கு இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை

சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் கடன் வழங்கல் நடவடிக்கையினை மேற்கொள்ளும் வகையில் சங்கப்பணியாளர்களுக்கான இரு நாள் பயிற்சிப்பட்டறை - எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 5 மணிவரை திருநெல்வேலியில் உள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

முதற்கட்டமாக 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நல்லூர், சாவகச்சேரி, காரைநகர், உடுவில், தெல்லிப்பழை ஊர்காவற்துறை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கும் இரண்டாம் கட்டமாக 12 ஆம், 13 ஆம் திகதிகளில் வேலணை, கரவெட்டி, கோப்பாய், யாழ்ப்பாணம், நெடுந்தீவு, சங்கானை, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களுக்கும் பயிற்சிப் பட்டறைகள் இடம்பெறவுள்ளன. இந்தப் பயிற்சி நெறியானது இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 04 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த போதிலும், தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(113)

# சவாரி பார்க்கச்சென்றவர் மாடு இடித்து காயம்

மாட்டுவண்டிச் சவாரி பார்க்கச் சென்றவரை மாடு இடித்ததில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஆவரங்கால் சந்திப்பகுதியில் இடம்பெற்றது. இதில் புத்தூரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் (வயது-33) என்பவரே காயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது- ஆவரங்கால் சந்திப்பகுதியிலுள்ள வயல்வெளியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5 மணியளவில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இடம்பெற்றது. இதனைப் பார்வையிடச் சென்ற க.சந்திரசேகரம் போட்டியில் பங்குபற்றிவிட்டு அருகில் நின்ற மாட்டை அங்கிருந்து அகற்ற முற்பட்டபோது திடீரென மாடு கோபம்கொண்டு முட்டிமோதியதில் அவர் வயிற்றுப்பகுதியில் காயமடைந்தார். தற்போது அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகிறார். (ப)

# மக்கள் தேவையை உணராதவர்களே தேர்தலுக்கு வழிவகுத்துள்ளனர்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களது தேவைகளை உணராதவர்களின் தூண்டுதலாலேயே தற்போது தேர்தல் இடம்பெறுகிறது. எனப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார். பதுளை பசறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது - நாட்டின் நலனிலும் மக்களின் தேவையிலும் அக்கறை காட்டாதவர்களின் செயலால் உருவாக்கப்பட்டிருப்பதே இந்தத் தேர்தல். இந்தத் தேர்தலால் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதார நல்லெண்ணநிலை பாதிப்படையும்நிலை உருவாகயுள்ளது.

தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டமையால் பல அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதநிலை அடைந்துள்ளன. தேர்தல் ஒன்று நடத்தப்படவேண்டிய சூழல் உருவாகியிராவிட்டால், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி 7 வீதத்தால் அதிகரித்திருக்கும். ஆனால், தேர்தல் அறிவிக்கப்பட்டதால், அபிவிருத்தி நான்கரை வீதம் குறைந்துள்ளது. மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும், இந்தப் பொருளாதார அபிவிருத்தியை மேலும் அதிகரிக்க முடியும். இந்தத் தேர்தல் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களின் விருப்பின் அடிப்படையில்கூட நடத்தப்படவில்லை. இது ஜே.வி.பியின் விருப்பத்தின் அடிப்படையிலேயே நடத்தப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் - 2004

நேர்காணல் : செந்தணன், சத்தியன்



# தமிழர்களின் ஒன்றுபட்ட சிந்தனையை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சந்தர்ப்பம்

**தமிழரின் சுயநிர்ணய, மரபு வழித் தாயகம், தமிழ்த் தேசியம், ஏகப் பிரதிநிதித்துவம் முதலியற்றை வலியுறுத்தி நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களை 'நமது ஈழநாடு' செவ்விகண்டு வருகின்றது.**

**அதனடிப்படையிலேயே எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சி.வி.கே.சிவஞானம் அவர்களுடன் பரிமாறிய கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.**

**கேள்வி** : *நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தமிழர்களைப் பொறுத்தவரையில் எந்த வகையில் முக்கியத்துவம் பெறவுள்ளது என நீங்கள் கருதுகிறீர்கள்?*

**பதில்** : தமிழர் தரப்புப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தும் வகையிலும், 2001 ஆம் ஆண்டு நாம் முன்வைத்த முக்கிய விடயமாகிய தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் என்ற கொள்கையையும், அவர்களுடன் பேசித்தான் இனப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்பதை மீண்டும் வலியுறுத்தும் ஓர் தேர்தலாக இது அமையவுள்ளது.

சிங்கள பேரினவாத சக்திகளும் சரி, சர்வதேச சமூகமும் சரி, சில தமிழ் மக்களும் சரி இந்த விடயத்தில் போதிய விளக்கமற்று இருப்பது உண்மையே. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைக்காகத் தம்மை அர்ப்பணித்துப் போராடி வருகின்றனர். அவர்களின் தியாகம் மட்டற்றது. இதனை மதித்து நாம் அவர்கள் எம்மில் ஒருவர், எமது இரத்த உரித்துக்கள் என்பதனை அடிப்படையாகக்கொண்டு வழங்கும் உரிமையே இது.

அது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தாலோ அல்லது பொய்ப் பிரசாரங்களாலோ வழங்கப்படுவதல்ல. தமிழ் உணர்வால் வழங்கப்பட்ட உரிமை. இதனை எவரும் கேட்டு வழங்கவில்லை. தமிழர்கள் தாமாக வழங்கிய உரிமை. இதனை உறுதிப்படுத்தும் வகையில் இத்தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தேர்தலில் சகல தமிழர்களும் வாக்களிக்கவேண்டியது அவர்களின் கடப்பாடாகியுள்ளது. நாடாளுமன்ற ஜனநாயகத்திலும் தமிழ் மக்கள் ஒன்றுபட்ட குரல் கொண்டவர்கள். அவர்களைப் பிரித்துப் பார்ப்பதில் அர்த்தம் இல்லை என்பதனையும் இத்தேர்தல் எடுத்துக்காட்டவுள்ளதால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இத்தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது.

இடைக்கால நிர்வாக சபையைத் தமிழர் அமைப்பதற்கும், தமிழருக்குத் தன்னாட்சி உரிமை கிடைப்பதற்கும், தமிழரின் ஏகோபித்த முடிவு வெளியுலகிற்குத் தெரிவதற்கும் இத்தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது.

**கேள்வி** - *ஈபிடிபி, ஈபிஆர்எல்எவ், வரதர் அணி போன்றவற்றின் கொள்கையைப் போன்ற கருத்துடைய ஆனந்தசங்கரி – அக்கட்சிகளுடன் இணையாமல் சுயேட்சையாகப் போட்டியிடுவதன் நோக்கம் எதுவென நீங்கள் கருதுகிறீர்கள்.*

**பதில்** : ஆனந்தசங்கரி ஒரு தலைசிறந்த அரசியல் அனுபவம் மிக்கவர். மக்கள் அவரைப் பலமுறை தமது பிரதிநிதியாகத் தெரிவு செய்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்கள். ஆனால், இன்று அவரது நிலையும், போக்கும் ஒருவருக்கும் புரியாத புதிராக உள்ளது.

அவரது நடவடிக்கைகள் அண்மைக் காலமாக இத்தகைய தன்மையுடையதாகக் காணப்படுவது எமக்கும், மக்களுக்கும் பாரிய குழப்பத்தை உண்டுபண்ணியுள்ளது.

அவரது செயற்பாடுகளின் மாற்றத்திற்குப் பின்புலத்தில் சில சக்திகள் செயற்படுவதாகக் கூறப்படுகிறது. குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு எதிரான சக்திகள் அவருடன் இரகசியமாகக் கூட்டுக்களை ஏற்படுத்தியுள்ளதாகப் பேசப்படுகிறது. ஆனால், எந்தளவிற்கு நியாயமானதென எனக்குத் தெரியவில்லை.

தமிழ் மக்களின் ஒட்டுமொத்த ஆதரவுடன் கடந்த பொதுத் தேர்தலில், நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட அவர், தற்போது தமிழ்மக்களின் உணர்வுகளையும் ஒற்றுமைப்பாட்டையும் உடைத்து, உலகிற்கு தமிழரை இழிவுபடுத்திக்காட்ட எண்ணுகிறார். இது மக்கள் பேசிக்கொள்வதுபோல் சமாதானத்திற்கு விரோதமான சக்திகளின் தூண்டுதலாக இருக்கலாம் எனவும் எண்ணக்கூடியதாக உள்ளது.

அவரது அரசியல் பொறுப்புணர்ச்சிக்கும் அரசியல் ஞானத்திற்கும் இத்தகைய செயல் ஏற்புடையதாக அமையாது. இனி அவர் யோசித்து முடிவெடுக்காதுவிட்டால், அவரது பெருமையையும், இதுவரை அவர்மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும் தானாகவே குறைத்துக்கொள்ள நேரிடும்.

**கேள்வி**: *1977 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஒருமித்துநின்ற தமிழ் உணர்வு, இம்முறையும் ஒன்றுபடும் என எதிர்பார்க்கின்றீர்களா?*

**பதில்** : ஆம், நிச்சயமாக. தமிழர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர் என்பதனை மீண்டும் வெளிப்படுத்துவதற்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பமாகவே தமிழ் மக்கள் இத்தேர்தலைக் கருதுகின்றனர்.

அதனால், இம்முறைத் தேர்தலிலும் ஒருமித்து நின்று அதிகளவிலான வாக்குகளை வழங்கி, தமிழர் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தி 1977 ஆம் ஆண்டு கிடைத்த ஆசனங்களைவிட அதிகளவிலான ஆசனங்களை, தமிழ் மக்களின் உணர்வுரீதியான போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் நின்று - போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெறும் என்பதில் ஐயமில்லை.

அர்த்தமுள்ள சமஷ்டியைப் பெறுவதற்கே இத்தேர்தலில் நாம் ஒன்றுபட்டுப் போட்டியிடுகின்றோம். இத்தேர்தலின்மூலம் நாம் மக்களிடமிருந்து இன்னுமொரு ஆணையையும் பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம்.

எமக்குச் சுதந்திரமானதும் நியாயமானதுமான சமஷ்டி அதிகாரம் கிடைக்கப்பெறாது போனால், பிரிந்துசென்று தனிநாடு அமைப்பதே சரியான முடிவாகும். இதனையே, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனும் குறிப்பிட்டிருந்தமை அனைவரும் அறிந்ததே.

சர்வதேசம் இன்று சிங்கள தேசத்தின் பொய்யான பிரசாரங்களை உணரத்தொடங்கியுள்ளமையால், எமது மக்களின் ஆணையைப் பெற்று, சுதந்திரமான ஜனநாயகத் தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு மக்கள் ஒன்றுபட்டு வாக்களிப்பர் என்பது எமது தெளிவான நம்பிக்கையாகவுள்ளது. இம்முறை தேர்தல் தமிழ்ப் பிரதேசங்களில் சூடுபிடிக்காதுபோல் உள்ளது எனத் தென்பகுதி வேட்பாளர்கள் சிலர் கேட்கின்றனர். இதற்குப் பிரதான காரணம் - மக்கள் மத்தியில் ஏகோபித்த முடிவு என்பது- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துதல் என்பதாகவுள்ளதால், அத்தகைய நிலை உருவாகியுள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

ஏனெனில், தமிழ் மக்களின் ஒட்டுமொத்த முடிவு தமிழ் உணர்வின்பாற்பட்டது. இவர்களின் அனைத்து எண்ணங்களும் தமிழ்த் தேசியத்தின்பால் ஈர்க்கப்பட்டுள்ளது. அதனால், எமது கட்சி வெல்வதற்கு அதிக சாத்தியம் உள்ளது.

**கேள்வி** : *தமிழ் உணர்வை இத்தேர்தலில் வலுவடையச் செய்ய நீங்கள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளீர்கள்.*

**பதில்** : முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களாகிய நாம் மிகவும் ஒருமைப்பாட்டுடன் செயற்பட்டு, மக்களுக்கு- இன்றைய அரசியல் நிலையையும் கடந்த கால அடக்குமுறைகளினாலும் காட்டிக்கொடுப்புகளினாலும் நாம் அடைந்த துன்பங்களை வெளிப்படுத்தி, அவற்றுக்கெல்லாம் தீர்வாக மக்கள் இத்தேர்தலைக் கருதச் செய்வதன்மூலம் தேசிய உணர்வை மேம்படுத்தவுள்ளோம்.

ஆனாலும், மக்கள் அத்தகைய தேசிய உணர்விற்கு உட்பட்டரீதியில் ஒன்றுபட்டு நிற்கின்றமை வெளிப்படையாகத் தெரியும் நிலையில், இன்றைய அரசியல் நிலைமை உள்ளது.

தமிழ் மக்கள் வீறுகொண்டு எழுந்த சுதந்திரவேட்கை கொண்ட இனம். அவர்களுக்குத் தேசிய உணர்வு இரத்தத்தில் ஊறியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1978 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட யாப்பு - இன்று மிகுந்த பிரச்சினைக்குரியதாகியுள்ளது.

இதனால், இந்த யாப்பை வைத்துக் கொண்டு ஜனாதிபதி என்ன முடிவெடுத்து, எமது உணர்வுகளுக்கு எல்லாம் மதிப்பளிக்கப்போகிறார் என்பது பாரிய கேள்விக்குறியாகியுள்ளது.

**கேள்வி** : *ஜனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய தேர்தல் அணுகுமுறை எந்த வகையில் ஏற்புடையது?*

**பதில்** : அவரது தேர்தலுக்கான முதல் நடவடிக்கையே தமிழருக்கு ஆபத்தானதாக உள்ளது. தீவிர இனவாதம் பேசுவதோடு, மகாவம்சத்தை அடிப்படையாகக்கொண்டு தமிழரின் அழிவில் திருப்திகாணும் கட்சியான ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்துள்ளதோடு, தனது பதவி ஆசைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதிலும், தமிழர் போராட்டத்திற்கு எதிரான சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதிலும், தமிழ்த் தேசிய உணர்வை உதாசீனம் செய்வதில் தற்போது முன்னணியில் நின்று செயற்படுபவராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விளங்குவதால், அவரது தேர்தல் வியூகம் - அதாவது தேர்தல் நடவடிக்கை, முழுக்க முழுக்க முரண்பாடான தன்மைகளின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கின்றது.


பிராந்தியங்களின் அடைப்படையிலான ஓர் சமஷ்டித் தீர்வை தமிழருக்கு வழங்கும் எண்ணப்பாடு அவருக்குத் தோன்றினாலும், அவற்றை வழங்குவதற்கான கட்சி ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கமுடியாது.

அத்தகைய பிரச்சினைக்குரிய சூழ்நிலையைத் தானே தோற்றுவித்துள்ளார். இந்நிலையில் அவர் தொடர்ந்தும் சமாதான நடைமுறையை முன்னெடுக்கக்கூடிய வகையான தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லைப்போல் தெரிகிறது.

☆

மகளிர் தினம்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்



# வணிகமயமாக மாறிவரும் குடும்பத்தை மாற்றியமைக்கவேண்டி நிலையில் பெண்

**தாயின் கருவில் இருந்தபோதும், பின்னர் வெளியுலகில் பிறந்து வாழும்போதும் - தாய் ஒரு தனித்துவமான உருவாகவே தோற்றம் பெறுகின்றாள். அவளுடைய சிறப்பான குண இயல்புகளை எல்லோரும் உணர்ந்துள்ளனர்.**

**அதனால், அந்தக் குணவியல்பு - வழி பாட்டிற்குரிய ஒன்றாகிவிட்டது. 'தாய்த் தெய்வ வழிபாடு' எனப் பேசப்படுகின்றது. ஆனால்....**

உலகம் எங்கும் பெண்களைப் பற்றி நினைக்க என ஒரு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் அந்த நாளில் பற்பல எண்ணங்கள் செயலாக்கப்படவேண்டும் என்ற குரல்களும் கேட்கும். எல்லா நாட்டிலும், எல்லாப் பண்பாட்டிலும் பெண்மை பற்றிய எண்ணக்கரு பேணப்படுவதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது தாய்மைப் பண்பு ஆகும்.

தாயின் கருவில் இருந்தபோதும், பின்னர் வெளியுலகில் பிறந்து வாழும்போதும் - தாய் ஒரு தனித்துவமான உருவாகவே தோற்றம் பெறுகின்றாள். அவளுடைய சிறப்பான குண இயல்புகளை எல்லோரும் உணர்ந்துள்ளனர்.

அதனால், அந்தக் குணவியல்பு - வழிபாட்டிற்குரிய ஒன்றாகிவிட்டது. 'தாய்த் தெய்வ வழிபாடு' எனப் பேசப்படுகின்றது. ஆனால், இன்று அந்த வழிபாட்டு மரபு மறைந்துவருகின்றது. தாயின் செயற்பாட்டை விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களும் தொழில்நுட்பக் கருவிகளும் நிறைவேற்றும் என்ற நம்பிக்கை மரபு தோன்றியுள்ளது.

இந்த மரபின் தோற்றம் மேலைத் தேசத்திலிருந்து கீழைத்தேசம் வரை தொடரும் நிலையில், இந்த மாற்றத்தை எதிர்கொள்ள மக்கள் தமது வாழ்க்கை முறைகளைத் திட்டமிடத் தொடங்கிவிட்டனர்.

இன்று பெண்ணின் இயல்பான ஆற்றலும், தலைமைத்துவமும் மதிக்கப்படாமல் இருப்பதற்கு வாழ்க்கை முறைகளின் மாற்றம் முக்கிய காரணமாகும்.

ஆணும், பெண்ணுமாக இணைந்து திருமணம்செய்து வாழும் குடும்ப வாழ்க்கையின் மூலமாக இந்தத் தாய்மை என்னும் தனித்துவம் பின்தள்ளப்பட்டு, வணிகநிலையான ஒருங்கிணைப்பும், தொழில்நுட்பக் கருவிகளின் ஆற்றலும் குடும்ப வாழ்க்கையின் கட்டுமானமாக மதிக்கப்படுகிறது.

பெண்ணின் ஆற்றலும் உழைப்புத் திறனும் கவனிக்கப்படாமல், குடும்பம் ஒரு வணிக நிறுவனம்போல் இயங்கத்தொடங்கிவிட்டது.

இந்த நிலையில், உலக மகளிர் தினம் நினைவுகூரப்படும்போது, மகளிரின் செயற்பாடுகளில் மாற்றம் வேண்டப்படுகிறது. இது எப்படியானது என்பதை எண்ணிச் செயற்பட மகளிர் மனங்களில் புதிய எண்ணங்களை விதைக்கவேண்டும். வணிக நிறுவனமாக மாறிவரும் குடும்பத்தை மாற்றியமைக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

எனவே, அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு உழைக்கவேண்டிய கடமைகளில் ஒன்று குறிப்பாகத் தமிழ்ப் பெண்களுக்காகக் காத்து நிற்கின்றது. கல்வியின் தேவையை உணர்ந்த பெண் அதைக் கற்றுத் தேர்ந்து, தன் அறிவை வளர்த்துக்கொண்டாள். 21 ஆம் நூற்றாண்டில் தகவல் தொழில்நுட்பத்தின் வேகத்திற்கும் ஏற்றதாகத் தனது தொழில்நுட்ப அறிவையும் பெருக்கிக்கொண்டாள். அவள் தன்னைத் தயார்செய்துகொண்டு தலைநிமிர்ந்தபோதும் நிலைமை சீராகவில்லை. குடும்பம் என்ற நிறுவனத்தில் அவள் ஆற்றலும் திறனும் மதிக்கப்படவில்லை. அதற்கு மாறாக அவள் தன்னுடைய அனைத்து ஆற்றல்களையும் களைந்துவிட்டு, வெறும் பெண்ணாகத் திருமணச் சந்தையிலே விலைபேசப்படும் பொருளாக நிற்கின்றாள்.

ஆணுக்குப் பொருளும், பொன்னும், நிலமும் கொடுத்து - குடும்ப இணைப்பாளராகப் பதவி பெறவேண்டியவளானாள். அப்படிப் பதவிபெற்றபோதும் அவள் திறமை மதிக்கப்படவில்லை. எனவே, பெண் மீண்டும் தன்னை இயற்கை நிலையிலே இனங்காட்டப் புதிய செயற்பாட்டில் இணையவேண்டி நேர்ந்தது.

சமூக அங்கத்தவர் என்ற பொதுநிலையில் தன்னை மாற்றிக்கொண்டு செயற்படவேண்டியவளானாள். தன்னிடம் இயற்கையாக இருந்த குண இயல்புகளைக் கைவிட்டுப் புதிய கோலங்களைப் புனைந்தாள். வன்முறையான, வக்கிரமமான எண்ணங்களைப் பிறரிடமிருந்து அகற்றும் உள மருத்துவ ஆற்றல் கொண்ட அந்தப் பெண், அந்தக் கடமையைப் புறக்கணித்தாள். வீட்டிலே அமைதி நிலவச் செய்த அவள், போர் முனைப்பான செயற்பாடுகளில் இறங்கினாள்.

அவளுடைய இந்த மாற்றம் காலத்தின் தேவையாகும். ஆனால், அதைக் கட்டுப்படுத்தும் சமநிலை உணர்வு அவளிடம் மறைந்து கிடக்கும் இன்னொரு ஆற்றல். அதை இப்போது அவள் பயன்படுத்தவேண்டும். இல்லாவிடில் வீட்டிலோ, நாட்டிலோ, உலகிலோ சமாதானத்தைக் கொண்டுவரமுடியாது. மூன்று, நான்கு தலைமுறையினரை நிர்வகித்து வீட்டில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவச்செய்யும் பெண்மையின் தெய்வீக ஆற்றல்தான் உண்மையான சமாதானத்தை உலகிற்குக் கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை.

☆

## உலக நோக்கு

## அமெரிக்கப் படைகளின் தாக்குதலுக்குக் கண்டனம்



(வோஷிங்ரன்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் போர் நடவடிக்கைகளை சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றின்மூலம் கண்டித்துள்ளது.

அமெரிக்காவை மையமாகக்கொண்டு இயங்கிவரும் சர்வதேச மன்னிப்புச்சபை -ஆப்கானிஸ்தானில் அமெரிக்க வீரர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத கைதுகளையும், தடுப்புக்காவலில் உள்ள கைதிகளின் துன்புறுத்தல்களையும் கண்டித்துள்ளது.

அமெரிக்கப் படையினர் கைதுசெய்வதற்கு முயற்சிக்குமபோது பொதுமக்கள் உயிரிழக்கவும், காயமடையவும் நேரிடுவதாகவும் -

படையினருக்கு எதிர்ப்பில்லாத பிரதேசங்களில் துப்பாக்கி பொருத்திய ஹெலிகொப்டர்களை அமெரிக்கப் படையினர் பயன்படுத்துவதாகவும், மேலும் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை நித்திரைகொள்ளவிடாது தடுத்து உளப்பாதிப்புக்கு உட்படுத்துவதாகவும், வெப்பம்கூடிய அறைகளில் அடைத்துவைக்கப்படுவதாகவும் -

ஆப்கானிஸ்தான் சிறைகளில் 2002 ஆம் ஆண்டிலிருந்து 1000 இற்கு மேற்பட்டவர்கள் சிறையில் அடைத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் மன்னிப்புசபை வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### நேபாள பெண்கள் அணி அழைப்புவிடுத்த

## பொதுவேலைநிறுத்தத்தால் இயல்புவாழ்க்கை பாதிப்பு!



(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோ போராளிகளின் பெண்கள் அணி அழைப்புவிடுத்த பொதுவேலை நிறுத்தத்தினால் சாதாரண மக்களின் இயல்பு வாழ்க்கை பரந்தளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவதும், படையினரால் பெண்கள்மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளுமே இந்த வேலைநிறுத்தத்திற்குக் காரணமாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேலைநிறுத்தத்தால் பாடசாலைகளும், வேலைத்தளங்களும் மூடப்பட்டன. வாகனப்போக்குவரத்துக்கள் பெருந்தெருக்களில் நிறுத்தப்பட்டன.

அண்மையில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு எதிராகவே இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாக பி.பி.ஸியின் சுஷ்கில் சர்மா காத்மண்டுவில் தெரிவித்தார்.

இதனிடையே நேற்றுமுன்தினம் காத்மண்டுவில் மாவோ தீவிரவாதிகள் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் மூவர் காயமடைந்தனர்.

நேபாளத்தில் மன்னரைப் பதவியிலிருந்து வெளியேற்றுமாறுகோரி, மாவோ போராளிகளினால் 1996 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டத்தில் இதுவரை 9000 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கெயிட்டியில் நடந்த கூட்டத்தில்

# ஆயுதபாணி மேற்கொண்ட தாக்குதலில் ஆறு பொதுமக்கள் பலி! 20 பேர் காயம்!

கெயிட்டியில் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி பேட்ராண்ட் அரிஷ்டைட்டின் வீழ்ச்சியைக் கொண்டாடுவதற்கென ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் ஆயுதபாணியொருவர் நடத்திய தாக்குதலில் ஆறு பொதுமக்கள்வரை கொல்லப்பட்டனர் எனவும் 20 பேர்வரை காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் ஸ்பானிய நாட்டு தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவரும் உள்ளடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவான குழுவைச்சேர்ந்த ஒருவரினாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி அரிஷ்டைட்டினால் தடைசெய்யப்பட்ட பாடலுக்கு கூட்டத்தினர் ஆடிக்கொண்டிருந்தவேளையில், அவருக்கு ஆதரவான சிமெரெஷ் குழுவினரின் ஆயுதபாணி ஒருவர் மலைப்பிரதேசத்தில் இருந்து தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்ற நேரத்தில் அரிஷ்டைட்டின் படம் தாங்கிய விளம்பரப்பலகையை எதிர்ப்பாளர்கள் உடைத்து, ஜனாதிபதி மாளிகையின் முன்னாள் எரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - முன்னாள் ஜனாதிபதி அரிஷ்டைட்டின் ஆதரவாளர்களினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டம்,




பாதுகாப்புக் காரணங்களுக்காக பிற்போடப்பட்டிருந்தது.

இதனிடையே, மத்திய ஆபிரிக்க நாடொன்றில் வசித்துவரும் ஜனாதிபதி அரிஷ்டைட் விரைவில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அணு ஆயுத விபரங்களை வெளியிட ஈரான் மறுப்பு!

### சர்வதேச அணுசக்தி அமைப்பு குற்றச்சாட்டு



ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அணுசக்தி அமைப்பு தனது ஆய்வறிக்கையில் - ஈரான் தன்வசமுள்ள அணுசக்தி ஆயுதங்களின் தகவல்களை வெளியிடுவதற்கு மறுத்துவருவதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா அதிகளவான அழுத்தத்தை ஈரான்மீது பிரயோகிக்க வேண்டுமெனவும் சர்வதேச அணுசக்தி அமைப்பு தெரிவித்திருக்கிறது. சர்வதேச அணுசக்தி அமைப்பு 35 நாடுகளை அங்கத்தவர்களாக் கொண்டுள்ள சபையின் ஒன்றுகூடலை அதன் தலைநகர் விஜென்னாவில் இவ்வார இறுதிவரை நடத்திவருகின்றது.

இந்தக் கூட்டத்தில் லிபியா, அண்மையில் அணு ஆயுதங்களின் உற்பத்தி தொடர்பான உபகரணங்களை அமெரிக்காவிற்கு அனுப்பியுள்ளமை தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதனிடையே ஈரானிய உயரதிகாரி ஒருவர், சர்வதேச அணுசக்தி அமைப்பு ஈரானின் அணுசக்தி தொடர்பான தகவல்கள் அடங்கிய ஆவணங்களை நீக்கிவிடுமாறு கேட்டுள்ளார்.


மேலும் சமாதானத் தேவைகளுக்காகவே அணு அமைப்புத் திட்டத்தைப் பாவித்துவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஈரானின் தேசிய உயர் பாதுகாப்புச்சபையின் அதிகாரி கசன் ரோவ்கானி கருத்துத் தெரிவிக்கும்போது - ஈரான் மனித தேவைகளுக்காகவே அணுசக்தியைப் பாவிக்கின்றதென்பதை சர்வதேச சமூகம் உணர்ந்துகொள்ளவேண்டும் எனவும், அணு அமைப்பின் திட்டங்களை மேற்கொள்வதற்கு அதற்கு உரிமை உண்டெனவும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் சென்ற ஆண்டு யுரேனியத்தை வலுப்படுத்தும் திட்டத்தை தற்காலிகமாகவே தமது நாடு நிறுத்தியிருந்ததாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## ஈராக்கின் அமெரிக்க சார்பு ஆளும்சபை அரசியல் சட்டவரைபில் கைச்சாத்து!





ஈராக்கில் அமெரிக்க அரசின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டுள்ள ஆளும்சபை - இடைக்கால அரசியல் சட்டத்திற்கான வரைபில் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

11 மணித்தியாலங்கள் தொடர்ந்த வாதங்களின் பின்னர் இந்த அரசியல் சட்டவரைபு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அரசியல் சட்டவரைபில் உள்ளடக்கப்பட்ட சில கருத்துக்கள் ஷியா முஸ்லீம்கள் ஆண்மீகத் தலைவரினால் ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படாதிருந்தபோதும், இறுதியில் அரசியல் சட்டவரைபினை அவர் ஏற்றுக் கொண்டார்.

25 அங்கத்தவர்கள் ஏற்றுக்கொண்ட அரசியல் சட்டவரைபினை, ஷியா முஸ்லீம்கள் ஆண்மீகத் தலைவர் ஆயதுல்லா அலி அல் சிஷ்ரானி நீண்டநாட்களாக எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்.

இடைக்கால அரசு - அமெரிக்கா இந்த வருடம் ஜூன் 30 இல் முற்றாக ஈராக்கியர்களிடம் ஆட்சிப்பொறுப்புகளை ஒப்படைக்கும் வரை நிர்வகிப்பதற்கான ஒரு அமைப்பு என தெரிவிக்கப்படுகிறது.



இந்தியாவின் ராஜஸ்தான் மானிலம் ஜெய்ப்பூரில் யானைகள் திருவிழா நடந்தது. இதில் ராம்நாத் சவுத்திரி என்பவர் கலந்துகொண்டு, பார்வையாளர்கள் மத்தியில் தனது நீண்ட மீசையைக்காட்டி மகிழும் காட்சியைப் படத்தில் காணலாம்.




அமெரிக்காவில் இப்போது சில்லறைக்கு தட்டுப்பாடு அதிகரித்துவிட்டது போலும், இதைப்போக்கும் வகையில் 5 சென்ட் நாணயத்தை லட்சக்கணக்கில் அச்சடித்து வருகிறார்கள். 1803 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 5 சென்ட் நாணயங்கள் அச்சடிக்கப்படுவது இதுதான் முதற்தடவை

இந்த நாணயத்தில் ஒரு பக்கத்தில் முன்பு இருந்ததுபோலவே அமெரிக்காவின் மூன்றாவது அதிபர் தோமஸ் ஜெபர்சனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இன்னொரு பக்கத்தில் மட்டும் சற்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. லட்சக்கணக்கில் அச்சடிக்கப்பட்ட இந்த நாணயங்கள் கப்பல்மூலம் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுவருகிறது.

## கிரீஸ் நாட்டு தேர்தலில் கொன்சர்வேட்டிக் வெற்றி





கிரீக் பொதுத்தேர்தலில் கொன்சவேற்றிக் கட்சி வெற்றிபெற்றுள்ளது. 10 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சிசெய்த சமஷ்டிக்கட்சி இம்முறை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளில் கொஷ்டாஷ் கரமன்லிஷ் இன் புதிய ஜனநாயகக் கட்சி 46 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது. இவரது வெற்றியினால் 2004 ஆகஸ்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுகள் பாதுகாப்பாக நடைபெறும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2004 ஆகஸ்டில் - ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இல்லை என் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் தனது வெற்றி உறுதியானதும் கொஷ்டாஷ் உடனடியாக ஒலிம்பிக் விளையாட்டு அமைப்பாளர் கியானாவைச் சந்தித்து ஒலிம்பிக்கை ஓகஸ்டில் நடத்துவது தொடர்பான பேச்சுக்களை மேற்கொண்டார். ஒலிம்பிக்கை எதென்ஸில் ஓகஸ்டில் நடத்துவதற்குத் தேவையான கட்டடப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அவற்றைத் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்கள் மத்தியில் கருணா நிலைத்து நிற்க முடியாது!

## கௌசல்யன் கருத்து

(கிளிநொச்சி)

கருணா என்கின்ற தனி மனிதனுடைய செயலுக்குத் துணையாக இருக்கின்ற சிலர், சில மோசமான, மனிதாபிமானங்களுக்கு அப்பாற்பட்ட மனிதாபிமானத்தை மதிக்காத சில செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். அது எமக்கும் மக்களுக்கும் பெரும் வேதனையைத் தந்தாலும் இந்தச் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் நிலைத்து இருக்காது என்பதில் நாங்கள் உறுதியாகவுள்ளோம் என, மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் வெளியிடுகையில்-

இன்றுகூட மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வந்த மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும், அவரோடு வந்த வர்த்தகர்கள், சில புத்திஜீவிகள் போன்றோரைச் சந்தித்துக் கதைத்துள்ளோம்.

இத்தகைய செயற்பாடுகள் என்றுமே வெற்றியடைந்ததில்லை. எனவே, நாங்கள் எங்கள் மக்களிடமிருந்து அவரைத் தனிமைப்படுத்தி- அவர் தனிமைப்பட்டு அவருடைய செயற்பாடுகள், அவருக்கு துணை போகின்ற அவருடைய செயற்பாடுகள் இல்லாதவிடத்து அந்த மக்களை அதற்கேற்றவாறு செயற்பட வைக்கவேண்டும்.

அதனை அந்த மக்கள் கேட்க வேண்டும் என்பதுதான் எங்களது வேண்டுகோளாகும். எங்களுடைய தலைமையும் செயற்பட்டு அதன்படி வெற்றிகரமாக நடக்கும் என்றும் நம்புகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## சங்கரியின் துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களால் பறித்து எரிப்பு!

யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஆனந்தசங்கரியின் துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களால் பறிக்கப்பட்டு எரியூட்டப்பட்டன.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில், யாழ். மாவட்டத்தின் சுயேட்சையாகப் போட்டியிடுபவரும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவருமாகிய வீ.ஆனந்தசங்கரியின் தேர்தல் பிரசார துண்டுப்பிரசுரங்களே இவ்வாறு பொதுமக்களால் எரியூட்டப்பட்டன.

பருத்தித்துறைவீதி, பரமேஸ்வராச் சந்தி, கெற்றப்போல் சந்தி, மற்றும் யாழ். நகரப்பகுதி முதலான பகுதிகளில் வைத்தே இந்த துண்டுப்பிரசுரங்கள் எரியூட்டப்பட்டன.

அவரது தேர்தல் பிரசாரத் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்ருந்தவர்கள் பொதுமக்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

துண்டுப்பிரசுரங்களைக் கொழுத்திய மக்கள் - தமிழ்தேசத்திற்கு துரோகமிழைக்கும் கூட்டத்துடன் இணைந்தவனே டக்ளஸிற்கும் உனக்கும் என்னடா வித்தியாசம் தமிழ்மக்களின் வாழ்வில் அக்கறையற்ற பேராசைக்காரனே தமிழனைக் காட்டிக்கொடுக்க யாருடன் பேரம் பேசினாய். போன்ற கோஷங்களை எழுப்பியிருந்தனர். என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப)

## ஐ.தே.க-ஈ.பி.டி.பி ஆதரவாளர்கள் வெள்ளவத்தையில் நேற்று மோதல்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கும் ஈ.பி.டி.பி கட்சியின் ஆதரவாளர்களுக்கும் இடையில் நேற்று நள்ளிரவு கைகலப்புச் சம்பவம் ஒன்று வெள்ளவத்தையில் இடம்பெற்றது.

வெள்ளவத்தை - உருத்திரா மாவத்தையில் நேற்று நள்ளிரவு 11.50 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், ஐ.தே.கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான தி.மகேஸ்வரனின் ஆதரவாளர்களுக்கும், ஈ.பி.டி.பி ஆதரவாளருக்கும் இடையே இந்தக் கைகலப்பு இடம்பெற்றதாக தெரியவருகிறது.

தங்களுடைய சுவரொட்டியை அகற்றிவிட்டு அதன்மேல் ஈ.பி.டி.பி சுவரொட்டிகைள ஒட்ட முற்பட்ட வேளை, வாக்குவாதம் கைகலப்பாக மாறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பாக வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக, மகேஸ்வரனின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

## தேர்தல் வன்முறைச் சம்பவம் 262 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்றுவரை 262 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பதிவாகியுள்ளது.

நேற்றுக்காலை 6 மணிவரை முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 26 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தலுக்குப் பொறுபபான பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (01)

## கிளாலி முன்னரங்கப் பகுதியில் தீ விபத்தால் வெடிபொருட்கள் அழிவு!

(யாழ்ப்பாணம்)

கிளாலியில் இராணுவத்தினரின் முன்னரங்கக் காவல்நிலைகளுக்கு முன்பாக பரவிய தீயால், படையினரின் ஒரு தொகுதி வெடிபொருட்கள் நாசமாகியதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. திடீரெனப் பரவிய தீ, முன்னரங்க நிலைகளுக்கு அப்பால் இருந்த சிறு பற்றைகள், புற்களில் பரவத் தொடங்கியதால், அந்தப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் மற்றும் பொறி வெடிகள் அழிந்துபோனதாகத் தெரியவருகிறது.

பின்னர் இராணுவத்தினர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு, நேற்று மாலையே தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகவும் தெரிவித்த இராணுவ அதிகாரிகள் -

இந்தத் தீ விபத்துக்கு சதி நாச வேலைகள் எதுவும் காரணமல்ல எனவும், இது ஒரு விபத்துச் சம்பவமே என்றும் தெரிவித்தனர்.

## மட்டு ஆயர்...

எதிராகத் தான் செய்த தவறுகளை மறைப்பதற்காகவே கருணா பிரதேசவாதம் எழுப்பும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டனர்.

அத்தோடு கிழக்கு நிலைமையை வழமைக்குக் கொண்டுவருவதற்கான நடைமுறைகள் - போராளிகளையோ பொதுமக்களையோ எந்தவகையிலும் பாதிக்காது என வும், புலிகள் இந்தக் குழுவினருக்கு உத்தரவாதம் வழங்கினர்.

இதனைச் செவிமடுத்த மேற்படி குழுவினர், இந்தப் பிரச்சினை சமாதானமான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்பதே தமது விருப்பமும் என விடுதலைப் புலிகளிடம் தெரிவித்தனர்.

## கருணாவின் செயல்கள்...

பெறும் அத்தகையகொரு சந்திப்புக்காகவே வன்னிக்கு வந்துள்ளேன்.

தனிமனிதரான கருணா - தனித்து இயங்குவதற்குச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். அதற்கும் திருகோணமலை மாவட்டத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது.

தேசியத்தலைவரின் சிந்தனைக்கமைவாக நாங்கள் எல்லோரும் நடந்து கொண்டிருக்கிறோம். வெளியில் கேட்கும் செய்திகளைக் கொண்டு அச்சமடையாமல் தேசியத்தலைவரை நம்பி, உயர்ந்த விடுதலைக்காக அவர் போராடிவரும் அவருடன் இணைந்து செயற்படுவோம்.

இதற்கமைவாகத்தான் சகல பிரதேசங்களிலும் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சாதியம், மத, பிரதேச எந்த வேறுபாடும் இல்லை எனத் தெரிவித்தார்.

புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா பி.பி.சிக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் - திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் அப்பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

அது குறித்து நேற்று பி.பி.சிக்கு பேட்டியளித்த கேணல் பதுமன் - திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி பொறுப்பில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

## கருணாவின் பிரதேச...

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

வணக்கத்துக்குரிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் பொதுமக்களும் அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகளும் வந்தார்கள். அங்குள்ள நிலைமைகளை, எங்களுக்கு கவலையோடு முன்வைத்தார்கள். மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தக் குழப்பநிலை சம்பந்தமாக பேசினார்கள்.

குறிப்பாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஷ், அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் அங்குள்ள நிலைமை பற்றி அவர்களுக்கு விளக்கினார்.

கருணா என்ற தனிநபரால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்கள் வெறியாட்டங்கள் பற்றி விளக்கினார்கள். நிச்சயமாக மிகவிரைவில் தலைமையகத்தால் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான ஆணை எடுத்துள்ளனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு, அம்பாறை மக்களுக்கு எந்தக் குழப்பமும் இல்லாமல் கருணாவுடைய தேசவிரோத செயல்கள் குறிப்பாக- எமது கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்ட சில நடவடிக்கைகள் சம்பந்தமாக அவர்களுக்கு விளக்கியிருக்கிறார்கள்.

எங்கள் தேசியத்தலைவர் மீதும், தேசியத் தலைமை மீதும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்கள் பற்றுதியோடும், நம்பிக்கையோடும் இருக்கின்றார்கள் என்பதை அவர்கள் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

தற்பொழுது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற ஏனைய மாவட்ட உறுப்பினர்கள் மீதும் அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்ற நிலைமைகளைக் கூறினார். அவர்களை மிகவும் மோசமானதும் குள்ளக் கூட்டங்கள், கும்பல்க்ளால் நடாத்தப்படும் செயல்கள் கருணாவின் ஒரு சில அடியாளர்களால் செய்யப்படுகின்றன.

அந்த மக்களை நம்பிக்கையோடு இருக்கும்படியும், மிகவிரைவில் முடிவுக்கு வந்து நிலைமை சீராகும். அந்த மக்களை பொறுமைகாக்கும்படி கூறி இருக்கிறோம்.

இந்தச் சந்திப்பில் அவர்கள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டப் பிரதிநிதியாக வந்தார்கள். இன்றைய சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமாக அமைந்தது.

கருணா பல குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கிறார். குற்றச்செயல்களை எங்கள் தேசியத்தலைவர் மன்னித்து, அவர் பொது வாழ்க்கையில் ஈடுபடுவதற்குரிய ஒரு பாதுகாப்பு உத்தரவாதத்தினையும் கொடுப்பதற்கு எமது தலைவர் இன்றும் தயாராக இருக்கின்றார்.

இந்த நிலையில், கருணா மனம் திருந்தி இயக்கத்தின் ஒழுங்கு நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட்டு, தனது செயற்பாடுகளை மாற்றிக் கொள்வாரேயானால் அவர் இந்த தேசத்துக்கும், இந்த மக்களுக்கும், தமிழ்த்தேசியத்துக்கும் இடையூறு விளைவிக்காது, விடுதலைக்கான போராட்டத்துக்கு எந்தவிதமான கரைச்சல் ஏற்படுத்தாது, அவர் விலகிச் செல்வதே சாலச்சிறந்தது.

இன்னும் எமது தலைவர் மனிதாபிமான நோக்கோடு அதைச் செய்வதற்கு தயாராக இருக்கின்றார். ஆகவே, கருணா இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வாராக இருந்தால் அவருக்குச் சிறந்ததாக இருக்கும் என்று நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸாரின் அடாவடித்தனம்...

இந்தச் சம்பவத்தையடுத்து சில பொதுமக்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டதுடன் மூவர் கைதுசெய்யப்பட்டனர். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து நேற்று மாலை பொதுமக்கள் ஏ-9 வீதியை மறித்து போராட்டம் நடத்தினர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்று மாலை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பிரசார வாகனங்களும், இராணுவ பாதுகாப்புடன் சென்ற ஈ.பி.டி.பி வாகனங்களும் எதிரெதிரே வந்த போது-

பொலிஸார் கூட்டமைப்பினரின் வாகனத்தின் இருந்த ஒலிபெருக்கியை நிறுத்துமாறு உத்தரவிட்டனர். அதேவேளை அந்தப் பகுதியில் ஈ.பி.டி.பியினரின் பிரசார வாகனத்தை இருந்தவர்கள் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்க முற்பட்டனர்.

அந்தத் துண்டுப்பிரசுரங்களைப் பொதுமக்கள் கிழித்தெறிந்ததையடுத்து அந்தப் பகுதியில் பதற்ற நிலை உருவாகியது. இதன்போது பொலிஸார் அப்பகுதியில் நின்ற சிலரைத் தாக்கியதுடன் மூவரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசென்றனர்.

இதையடுத்து சுமார் 4 மணியளவில் பொலிஸாரின் அடாவடித்தனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் - கைதான மூவரையும் விடுவிக்கக் கோரியும் ஏ - 9 வீதியில் மறியல் போராட்டத்தை நடத்தினர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் ந.ரவிராஜ் தலைமையில் நடந்த இந்த மறியல் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

பொதுமக்களில் வீதி மறியல் போராட்டத்தினால் வாகனப்போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது. இதையடுத்து அவ்விடத்துக்கு இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் வந்து ரவிராஜ் மற்றும் பொதுமக்களுடன் பேச்சு நடத்தினர்.

பொலிஸார் கைதுசெய்த மூவரையும் விடுவித்தால்தான் தமது மறியல் போராட்டத்தை நிறுத்த முடியும் என்று பொதுமக்கள் உறுதியாகத் தெரிவித்ததையடுத்து மாலை 5 மணியளவில் கைதான மூவரையும் பொலிஸார் விடுவித்தனர்.

இதையடுத்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் அங்கிருந்து விலகிச் சென்று போக்குவரத்து சீரானது. (25,29,34)

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1596 திகதி: 05.03.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Z | 8 | 5 | 3 | 2 | 3 | 8 |




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.